தமிழ் உதயா



# பின்னோக்கிப் பாயும் நதியில் உருளும் கூழாங்கற்கள்...



பசுபதி உதயகுமாரி என்னும் இயற்பெயர்கொண்ட கவிஞர் தமிழ் உதயா ஈழத்தில் வன்னிமாநகரின் மல்லாவியூரில் பிறந்தவர். மல்லாவி மத்திய கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றவர்.

வன்னியின் வலிகளை உண்டு 1984இன் தொடக்கத்தில் ஈழ யுத்த வேர்களில் தனது எழுத்துகள் சூல்கொண்டதாகச் சொல்லும் கவிஞர் தமிழ் உதயா, கல்விப்பணியில் கணித, விஞ்ஞான ஆசிரியராக வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 20 ஆண்டுகள் சேவையாற்றி இலங்கை கல்வி நிர்வாகச்சேவை (SLEAS) அதி உயர் தகைமைச் சான்றிதழ் பெற்று வவுனியா மாவட்டக் கல்விப் பிராந்தியத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளராக சேவையாற்றியவர்.

ஈழத்தின் இரத்த வடுக்களையும் புலம்பெயர்தலின் மீளா வலிகளையும் உணர்ந்தவர்.

இலங்கை மற்றும் தமிழகத்திலிருந்து வெளிவரும் முன்னணி இலக்கிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளிவந்து பரவலான கவனத்தைப் பெற்றுள்ளது.

தற்போது லண்டனில் வசித்து வருகிறார்.

# பின்னோக்கிப் பாயும் நதியில் உருளும் கூழாங்கற்கள்

என்றும்
பிரியமுடன்
தமிழ் உதயா

தமிழ் உதயா

நன்செய் பிரசுரம்

பின்னோக்கிப் பாயும் நதியில் உருளும் கூழாங்கற்கள் * கவிதைகள் * தமிழ் உதயா * © தமிழ் உதயா * முதல் பதிப்பு: டிசம்பர் 2016 (இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம்) * நன்செய் முதல் பதிப்பு: ஆகஸ்ட் 2017 * வெளியீடு: நன்செய் பிரசுரம், அபுபேலஸ், திருவாரூர் சாலை, திருத்துறைப்பூண்டி – 614713. செல்: 9789381010, 9092336999 * அச்சாக்கம்: சாய்தென்றல் பிரிண்டர்ஸ், சென்னை–5.

பக்கம்: 96

**ISBN: 978-81-930475-3-8**

விலை : ரூ. 80

## ஒரு கைப்பிடி வார்த்தைகள்

தமிழ் உதயா கவிதைகளுக்கு
நின்று நிதானித்து
நெடிய முன்னுரை ஒன்றை
நிகழ்த்துவதே நியாயமானது.
தவிப்பின் பிடியிலிருந்து
ஒரு கைப்பிடி வார்த்தைகளை
அள்ளிப் போடுவதில்
விருப்பம் இல்லைதான் எனக்கு.
இவர் கவிதைகள்
துரத்தியடிக்கப்பட்ட கனவுகளிலிருந்து
பிறந்திருக்கின்றன;
வதைகளிலிருந்தும் வலிகளிலிருந்தும்
பிறந்திருக்கின்றன.
காயங்களுக்குள்
மூடுண்டு கிடந்து
வாழ்க்கை வடிக்கும் துடிப்புகள்
கவிதைகளாகி உள்ளன.
இளமைக்கே உரிய
உட்பொதி சித்திரங்கள்
இவர் கவிதைக்குள்
உடைந்து சிதறிக் கிடக்கின்றன.
வாழ்க்கை மக்களை வஞ்சிக்கும்போது
ஏற்படும் அவலங்களை
எந்த நதியும் எந்தக் கடலும்
அனுபவித்தது இல்லை.
'எந்த உரிமையும் இல்லை
சொந்த மண்ணில்' என்று
நூறு பகல்கள் நொறுங்கிச் சாய
அதிகார ஒற்றை இருள்
அடித்து விரட்டினால்

எங்கே போவது?
எவர் வாசலில் நிற்பது?
எவரிடம் கெஞ்சி
வாழ்க்கையை யாசிப்பது?
'இளங்குருத்து வாடலாமா?
தளிர் மொட்டே எழுந்து வா
என் இனியவளே!
புலம்பெயரும் ஒரு புலர்தலுக்கு'
என்று
தமிழ் உதயா கவிதையாய்க்
கசிந்து உருகும்போது
துயரங்களின் இடைவெளியில்
நம்பிக்கை துளிர்விட்ட போதிலும்
உரிமை நமட்டப்பட்டுப் போகிறதே
அதற்கென்ன இழப்பீடு
என்கிற வினாவால்
நம் நிம்மதி குலையாமல் இல்லை.
'கரையோர நாணல் நுனியில்
ஒரு முதிய வண்ணத்துப்பூச்சி
ஏக்கத்தில் நிறைந்து
இன்னும் இறந்து போகாது
எதையோ எதிர்பார்த்துக் காத்திருக்கிறது'
கவிதை
சலனமற்ற ஒரு நதியோரம்
இப்படி நகர்கிறது நம் இதயத்தில்
எண்ணற்ற சலனங்களை
ஏற்படுத்திக்கொண்டே.
ஆயின்
அந்த மூத்த வண்ணத்துப்பூச்சிக்கென்று
ஒரு பரிந்துரை வரி எழுதி
வாழ்க்கையிடம்
நாம் கொடுக்க முடியுமா?
ஆயின்
இந்த இருள் நரம்புகளில் அதிரும்
துயரம் ஓயாமல்

தொடரப்போவதில்லை.
'கல்லெறிக்குப் பயந்து
சுதந்திரப் பறவைகள்
பறப்பதை நிறுத்துமா என்ன?
தூண்டில் இட்டதால்
துள்ளல் மறந்து மீன்கள்
ஆழத்தில் ஒதுங்கி விடுமா என்ன?'
உயர்ந்த வானமும் ஆழக் கடலும்
வினாக்களில் படிமங்களை நிறுத்திவிட்டுப் போக
இங்கு வரவில்லை.
தமிழ் உதயா வைக்கும்
விசாரணைகளை முன்னிருத்தி வைத்து
நம்மைக் கலைத்துப் போட்டுவிடவே
வந்துள்ளன.
தமிழ் உதயா
குருதியோட்டத்தில்
துடித்துக்கொண்டிருக்கும் உணர்வை
ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் பெற
கட்டாயம் இக் கவிதைகளைப்
படிக்க வேண்டும்.

**ஈரோடு தமிழன்பன்**

# வாழ்த்துரை

இலக்கியப் படைப்புகள், தன்னைச் சுற்றியுள்ளவை மீதான மனிதனின் அவதானிப்புகளாகவே பெரும்பாலும் அமைந்து விடுகின்றன. உள்ளார்ந்த இலக்கியத் திறமை இருந்தாலும் தன்னைச் சுற்றியுள்ள அரசியல், சமூகச் சூழ்நிலை போன்றவை தாக்கம் செலுத்துவதையும் உணர முடிந்துள்ளது. நாவல், சிறுகதை போன்ற இலக்கிய வடிவங்கள் இன்றைய காலகட்டத்தில் யதார்த்தப் பண்புடன் மிளிர்வதைக் காணமுடிகின்றது.

கவிதைகளைப் பொறுத்தளவில் யதார்த்தப் பண்புகளுடன் கற்பனை வளமும் பொதிந்திருப்பதைப் பார்க்கும்போது 'தனித்துவம்' என்ற வரையறையை முன் வைக்க முடியாமல் இருக் கின்றது. கவிஞனின் உள்ளத்தில் இருந்து எழும் உணர்ச்சிப் பெருக்கு, அவனது சிந்தனை ஆற்றல், புலக்காட்சியின் வழியாகக் கிரகித்தல் போன்றவை இணைப்புப் பெற்ற நிலையின் வழிநின்று தமது படைப்புகளை வெளிக்கொண்டு வருகிறான். இதுவே கவிஞனுக்கும் ஏனைய துறை சார்ந்த படைப்பாளிகளுக்குமுள்ள புரிதலைக் கோடிட்டுக் காட்ட வேண்டியுள்ளது.

மரபுக் கவிதைகளின் வரவு பொதுவாகக் குறைந்து வர புதுக்கவிதைகளின் வரவு பன்மடங்கு உயர்ந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. புதுக்கவிதைகள் புற்றீசல்கள் போல வெளிக் கிளம்பிக் கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்திலே, மனதிற்குச் சாந்தத்தையும், மனக் கிளுகிளுப்பையும் உற்சாகத்தையும் தரக்கூடிய கவிதைகள் உலா வருவதையும் அவதானிக்க முடிந்துள்ளது.

இவற்றையெல்லாம் அவதானித்தவனாக தமிழ் உதயாவின் 'பின்னோக்கிப் பாயும் நதியில் உருளும் கூழாங்கற்கள்' என்னும் கவிதை நூலை நோக்குகின்றேன். உள்ளார்ந்து பார்க்கும்போது உருவகங்கள் உரமேறியிருப்பதை உளமார உணர்கின்றேன். இவரின் சில கவிதைகள் வரலாற்றைப் புரட்டிப் பார்க்க வைத்துள்ளன.

சொற்சுருக்கம் இருந்தும் பொருட்பாடு அர்த்தமுள்ளதாக இருக்கின்றது. ஆசிரியரின் கற்பனை வளம், இயற்கையோடு இணைந்த போக்கு, கருத்துக்குவியல் என்பன பொலிவு பெற்றுள்ளன. மேலும் கவிதைகளுக்குக் கொடுத்துள்ள தலைப்புகள் புதுமையானவை யாகவும் இருப்பது சிறப்பே.

'உயர்வோ தாழ்வோ
மகிழ்வோ துக்கமோ
அன்போ பிரிவோ
ஒரு ஞானத்தை
போதித்து விடுகிறது!'

மேலே கூறப்பட்ட கவிஞரின் கவி வரிகள் ஒரு தெளிந்த மனநிலையைக் காட்டுவதாக உள்ளது. தமிழ் உதயா தொடர்ந்தும் பல படைப்புகளைத் தர வேண்டும் என வாழ்த்தி அவர் பணி சிறக்க வேண்டுகிறேன்.

**வவுனியூர் இரா. உதயணன்**
தலைவர்
தமிழ் இலக்கிய நிறுவகம்
*10.12.2016*

# அணிந்துரை

கவிதை என்ற பெரும் புனைவு வெளியில் கால் பதிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லல், கவிதையும் மக்களாட்சிமயப் பட்ட விரிவும் கலந்த செயற்பாடு எனலாம்.

கட்டற்ற நுழைவுச் சுதந்திரத்தை தந்திருத்தல் கவிப் பெருக்கை ஏற்படுத்தும் வேளை, அதன் தரநிலை ஏற்றங்கள் அல்லது பண்பு நிலை (Quality) நியமங்கள் பற்றிய கருத்தாடல்களும் மேலெழத் தொடங்கியுள்ளன.

கவிதை என்பது படிமங்களின் உலாவியாகிறது. படிமங்களை உலாவ விடுதலும், படிமங்களுக்கிடையே இடைவினைகளைக் கட்டவிழ்த்தலும் மொழி வழியாக நிகழ்த்தப்படும் பின்னற் பாய்ச்சலாகிறது.

தமிழ் உதயாவின் 'பின்னோக்கிப் பாயும் நதியில் உருளும் கூழாங்கற்கள்' என்ற தொடரே படிமங்களின் உருட்டலாகின்றது. மரபுவழிப் புலக்காட்சியோடு ஒட்டிச் செல்லாது, மாற்று வகைக் காட்சிகளோடு உறவாடுதல் சமகாலக் கவிஞர்களிடத்துக் காணப்படும் புனைவு நெறி.

நவீன நுகர்ச்சிச் சமூகம் மாற்று வகைகளிற்கே முதன்மை கொடுத்தல் கவிதையிலும் நீட்சி கொண்டுள்ளது. அந்நிலையில் 'உள்ளது புனைதல்' என்ற தளத்திலிருந்து மாற்று வகைப் புனைவியம் நோக்கிய பெயர்ச்சி தமிழ்க் கவிதைப் பரப்பிலே பரவலாக நிகழத் தொடங்கியுள்ளது. 'பூக்களின் வாழ்தல் போல' என்ற முதற்கவிதையே அதற்குரிய நுழைவாயில் திரையைத் திறந்துள்ளது.

சுமார் எழுபத்தைந்து கவிதைகளைக் கொண்ட இத்தொகுப்பில் ஆழ்ந்த மனச்சஞ்சலங்கள் பல்வேறு நுண் வடிவங்களாக எழு கோலம் பெற்றுள்ளன.

'ஒரே ஒரு முறை
பார்த்து வர
முயன்று பார்
அந்த ஆற்றின்
மருதங்கிளை நிழலில்
நாணல் நுனியில் காத்திருக்கும்
வயதான வண்ணத்துப்பூச்சியை!'

ஆழ்ந்த மன சஞ்சலங்களின் சொற்களை நோக்கியத் தேடலாக மேற்குறித்த வரிகள் அமைந்துள்ளன.

கவிதையைக் கருத்து வினைப்பாட்டுக்கு (Discourse) உரிய கருவியாக்குதலும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

கருத்து வினைப்பாட்டை முன்னெடுக்கும் கவிதைகள் நடப்பியலோடு உறவாடுதல் வாழ்க்கையும் கவிதையும் 'பருந்தும் நிழலுமாக'ப் பரவிச் செல்லலைக் காட்டுகிறது. 'வீட்டுக்குக் கூட்டிப் போயேன் அம்மா' என்ற கவிதை அதற்குரிய வகை மாதிரியான எடுத்துக்காட்டு.

ஒரு புறம் மல்லாவி கிராமத்தின் பதிலீடற்ற அழகுப் பரவல்களோடு உறவாடும் கவிதைப் பரவல்களும் இன்னொரு புறம் இடைநிலைப் பரப்பைவிட்டு நீங்கிய மனவெளியிலே பறத்தலும் என்ற இருநிலைப் பரிமாணங்கள் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. வெவ்வேறு மனநிலைகளில் எழுதப்பட்ட கவிதைகளை ஒன்றிணைக்கும் பொழுது நடப்பியலும், இருத்தலியப் புனைவுகளும் படைப்பு நீட்சியின் பரிமாணங்களாகி விடுகின்றன.

அவ்வாறான இருதளக் கோலங்கள் பின்வரும் அடிகளிலிருந்து மேற்கிளம்புகின்றன.

'ஓர் அச்சம் கலைந்த
நிதானத்தோடு
ஒரு வாழ்வை
யோசிக்கத் தோன்றுகிறது
தொடரும் பாதைகளின் ஓரத்தில்
ஒரு செடிகூட முளைப்பதாயில்லை
ஆனால் மரம் வளர்ந்து விடுகிறது
உள் மனதின் அடிவாரத்தில்
அதில்
வேண்டாத பறவைகளும் வந்து
நிழல் தேடிவிடுகின்றன'

நடப்பியலும் இருத்தலியலும் ஒன்றையொன்று ஏறிக் கடந்து செல்வதை மேற்குறித்த அடிகளிலே காணலாம்.

கவிஞர்களை நிலத்தோடு சுவற வைப்பது, அவர்களின் வாழ் நிலை இருப்பு. மல்லாவி கிராமத்தின் வாழ்க்கை நிலவரம் 'தோன்றுவதும் மறைவதுமாய்' கவிதைகளிலே பரவிக் கிடத்தல் மண்ணைவிட்டு நீங்காத கவிப்புலத்தின் மேலெழுச்சிகளாக உள்ளது.

அவ்வகையில் 'எப்போது வரும் என் தீபாவளி' என்பதிலிருந்து சில வரிகள் வருமாறு:

'தோட்டத்து வேலியில் எட்டிப் பிடுங்கி
வெறும் உப்பு வெங்காயத்துடன்
முன் பாலில் வதக்கிய
முருங்கைக்காய்ப் பிரட்டல்
மல்லாவி சந்தையில்
அப்போதுதான் பிடுங்கி வைத்த
வெண்டிப் பிஞ்சுப் பால்கறி
மன்னார் தொடுகடலில்
விடத்தல் தீவு கண்ட
தங்கராசு அண்ணன் தரும்
கருங்கண்ணிப் பாரைமீன்'

மண்ணோடு கலந்த கவிதைகளும், கற்பனை முகிழ்ப்போடு மேலெழும் அருவ மொழி ஏற்றங்களுமாக இத்தொகுதியில் உள்ள ஆக்கங்கள் கவிதை வெளியின் உலாவிகளாக உள்ளன.

வாழ்க்கையின் அசைவுகள் ஆக்க எழுத்துப் பணிகளின் தொடர்ச்சிகளாக வளர வாழ்த்துகள்.

**பேராசிரியர் சபா. ஜெயராசா**
இலங்கை
*10.12.2016*

# பின்னோக்கிப் பாயும் நினைவுநதியின் அனுபவக்கற்கள்

ஒரு பெரும்பாறை தன் வழியில் உருண்டு உருண்டு தத்தி, தடுமாறி, நதியோடி, அனுபவத்தால் வழுவழுப்பாகி பயணித்துக் கொண்டே இருக்கிறது எல்லையற்ற பெருவெளியெங்கும்.

உதயாவின் ஆழ்வெளி பயணிக்கும் கவிதைகள் இத்தொகுப்பு முழுவதும் சாமரம் வீசுகிறது. தீக்கொண்டு எரிக்கிறது. காலம் ஆற்ற மறந்த காயங்களைக் கண்ணீரால் கழுவுகிறது. காதலின் பின் நினைவுகளை மீட்டெடுக்கிறது. புனைவுகளின் வெளியில் சிறகடிக்கிறது. வாழ்தலின் இருப்பை, இருத்தலை உணர்த்துகிறது. புலம்பெயர்தலின் வலிகளை சொற்களால் சுடுகிறது.

இப்படிக் கவிதையின் பல்வேறு வடிவங்களை, பரிணாமங் களைத் தந்து விரிந்துகொண்டே இருக்கிறது. பெரும் சிறகெடுத்துப் பறக்கிறது. வானம் சிறியதாய் மிகச் சிறியதாய் சுருங்கிப் போகிறது.

பின்னோக்கிப் பாயும் நினைவின் நதியில் உருளும் அனுபவக் கற்களே கவிதைகளாய்ச் சொற்களில்.

வாழ்த்துகள் உதயா !

முருக தீட்சண்யா

# பேரன்பின் கைப் பிடித்தபடியே!

எப்படி எனக்குள் இவை துளிர்த்தன. இவற்றில் கவிதைக்கான ஆழ்ந்த பொருளும் மொழிநடையும் இருக்கிறதா? தெரியவில்லை எனக்கு. ஆனால், என் உணர்வுகள், ஆழ்மனத்தேடல்கள், பிரிவின் வலிகள் என்று சூல் கொண்டு வெடிக்கும் சொற்களை நான் வெறுமனே வேடிக்கை மட்டுமே பார்க்கிறேன்.

என் மூலமாக வந்த இவை முழுவதும் என்னுடையவை இல்லை. இந்த என் அனுபவ ஓடையில் யார் யாரோ நீந்தித் திளைத்திருக்கிறார்கள். கற்களை வீசிவிட்டுப் போயிருக்கிறார்கள். தீக்கொண்டு சுட்டவர்களையும் அணைத்திருக்கிறேன். வலிகளைப் பெருமூச்சோடு கடந்து போயிருக்கிறேன். சில சமயம் பூக்களின் மலர்தலுக்கிடையே எழுதி இருக்கிறேன். பல சமயம் வெடிச் சத்தங்களுக்கிடையே அழுதிருக்கிறேன். என்னை நானே சொற்களால் உழுதிருக்கிறேன்.

இப்போது திரும்பிப் பார்க்கையில் சமவெளி நோக்கிப் பாயும் சலனமற்ற ஒரு நதி போலத்தான் வாழ ஆசைப்பட்டிருக்கிறேன். ஆனால், வாழ்க்கை பேரிரைச்சல்களையும் நிறைவேறாப் பெருங்கனவுகளையுமே பரிசாகத் தந்திருக்கிறது. ஆனாலும், பெரிதாய் வருத்தம் ஒன்றுமில்லை. எனக்கு வழங்கப்பட்ட இந்த வாழ்வை ரசிக்கப் பழகிக் கொண்டேன்.

என் எழுத்துகள் பேசப்பட வேண்டும் என்ற வெற்றுக் கனவுகள் ஏதுமில்லை. என்னுடைய இந்தக் கவிதைகள் ஒரு போராட்டக்காரியின் கவிதைகளும் அல்ல. ஆனால், இது போர்க்களத்தில் பூத்த பூ. காயங்கள் கடந்தும் சுயம் வீசும் பூ.

பின்னோக்கிப் பாயும் இந்த நதியில் பேரன்பின் கைப் பிடித்தபடியே முன்னோக்கி நடக்கிறேன்.

வாழப் பிடிக்கிறது இன்னும் இன்னும்...

**தமிழ் உதயா**

## நன்றி

வவுனியூர் இரா. உதயணன்
(தலைவர், இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம், லண்டன்.)
கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன்
பேராசிரியர் சபா. ஜெயராசா
மன்னர் மன்னன்
முருகதீட்சண்யா
தர்மா பிரிண்டர்ஸ்

★ ★ ★

வீரகேசரி
ஈழநாதம்
களத்தில்
தினமுரசு
கலைச்செல்வி
கணையாழி
காக்கைச் சிறகினிலே
இனிய உதயம்
புதுப்புனல்
நான்காவது கோணம்
பரணி
எம்பெருமான்
தினகரன்
மலைகள்.காம்
காற்றுவெளி இணைய இதழ்



வானிருந்து வழிகாட்டும்
என் தாய்க்கும்
இப்போதும் கைப் பிடித்து
வழி நடத்தும்
என் இரண்டாம் தாய்க்கும் !

## பூக்களின் வாழ்தல் போல

யாரும்
கற்றுத் தர வேண்டியதில்லை
நடப்பதற்கு
முயன்று தவறி
தவறி முயன்று
கற்றுக்கொள்கிறோம்.

யாரும்
சொல்லித் தர வேண்டியதில்லை
மனதின் பாகங்களை
படித்து உணர்ந்து
உணர்ந்து படித்து
அறிந்துகொள்கிறோம்.

யாரும்
விட்டுச் செல்ல வேண்டியதில்லை
மலர்ந்து நுகர்ந்து
நுகர்ந்து மலர்ந்து
பூக்களின் வாழ்தல் போல
வாழ்க்கை பாரமானதல்ல
மிக மிக சௌந்தர்யமானது!

□

## துரோகத்தில் ஒளிர்ந்தணையும் வாழ்த்துகள்

வாழ்த்துகள் வாழ்த்துகள்
என வாயார வசை புகழ்கிறேன்
கண்டதும் சுடச்சுட கட்டி அணைக்கிறேன்
கைகளையும் குலுக்குகிறேன்.

உள்ளாரப் புகைந்து
உளம் முழுவதும் பொருமுகிறேன்
உதட்டோர மென் சொல்லால்
ஒற்றை வரி சொல்கிறேன்
என்னில் ஒருபடி மேலே ஏறியதோ
எனக்கென்ன இது கீழோ
இறுமாந்து நிற்கிறேன்.

தலைக்கனத்தை மறைக்கத் தடுமாறி
எனக்கே எச்சரிக்கை தொனிக்கிறேன்
வெட்ட வெளிச்சமாய்
ஒரு குழி வெட்டி
வீழ்த்திவிட வேண்டும் என
சாபமும் இடுகிறேன்
ஆனாலும் வெளிப்படையாக
வெற்றி பெற வேண்டுமென
வாயார வாழ்த்துகிறேன்.

முன்னேறி மூன்று இலை வருமுன்னர்
முளையிலேயே கிள்ளி எறிய வேண்டுமென்று
முணுமுணுத்துக் கொள்கிறேன்
உறிஞ்சிக் குடித்து
கழன்று விழும் மலையட்டைப் போல
அமுதுண்டு இறுமாந்து களர்கிறேன்
இருந்தும் வாயார வாழ்த்துகிறேன்
துரோகத்தில் ஒளிர்ந்தணையும் வாழ்த்துகளாய்.
எப்பிறப்பிலும் தாழ்பிறப்பு இப்பிறப்பு
மானிடனில் தப்பிப் பிறக்க
தவமேதும் உண்டோ சொல்!

□

## மண்டியிடாத மலையருவி

அந்தியில் மறைந்தாலும்
எந்நாளும் பூரணமாய்
பிரகாசிக்கும் கதிரவன்
ஓய்வு எடுப்பதில்லை
அரைத்திங்கள் தேய்ந்து வளரும்
ஓய்யார நிலவு
ஒரு நாள் இருளிற்கு
ஒளிந்து இருப்பதில்லை.

ஆழமாய்க் கிடந்தாலும்
கரை தொட ஆர்ப்பரிக்கும்
அலைகளின் பாய்ச்சலால்
கால்கள் வலிப்பதில்லை
பிரபஞ்சம் மூச்செடுக்க
பஞ்சமின்றி எங்கும் நிறையும்
அடங்காத காற்றுக்கு
சிறகுகள் ஒடிவதில்லை.

இரவே காணாது மடியும்
ஒரு பகல் ஆயுளோடு
உறவாடும் பூக்களுக்கு
உயிரின் நிலை கசப்பதில்லை
உயிர்ப்பின் இருப்பிற்காய்

தன்னை நிதம் உருக்கி
உணவு தொகுக்கும் மரங்களுக்கு
வாழ்வு சலிப்பதில்லை.

தணல் பற்றி
எந்த மாசுவையும்
சுவாலையால் கொளுத்தும்
தீக்குச் சுடுவதில்லை
போகும் இடம் தாவி
தாகம் தீர்த்த மலையருவி
யாரையும் நம்பி
மண்டியிடுவதில்லை.

உளியின் வலி தாங்கி
உடைந்தழியும் கருங்கல்
செதுக்கியச் சிற்பமாகி
சிதைந்தழிவதில்லை
மழைத்துளி சிப்பிக்குள் விழுந்து
முத்தாகுவது போல
எட்டிப் பிடிப்பது இலக்கெனில்
தொடுவானம் தூரமில்லை!

□

## புலர்தலில் புலம் பெயரும் பூ நீ

இருளின் துயில் கலைந்த பின்னும்
நீ என்ன இழுத்துப் போர்த்தி
உறங்கிக் கொண்டிருக்கிறாய்?

சாம்பல் மேட்டின்
தெருக்களைக் கிழித்து
தன் சோதியைப் பிளந்து
முகில்களைத் தொட்டு முத்தமிட்டபடியே
அவன் சிரித்தபடி வருகிறான்
நீ கணக்கெடுக்காமல் கண்ணுறங்கலாமா?

சிமிட்டிச் சிமிட்டி
வரவேற்றுச் சிங்காரித்த பூங்காவனங்கள்
புன்னகைப் பன்னீர் தெளித்து
புதுப்பெண்களாய் மலர்ந்து பூப்பெய்தி
விடியல்களை மலர்த்திக் கொண்டிருக்கிறது
வாசனை கமழும்
நீ வாடிக் கிடக்கலாமா?

பனித்துளிகள்கூட பதுங்கியிருந்து
வேடிக்கைப் பார்க்க
உனக்கென்ன நடந்தது?
ஏன் உயிர் இறந்த பூங்கனியாக
உறங்கிக் கிடக்கிறாய்?

இருளே துயில் கலைந்து
துயர் களைந்து விட்டது
இளம் குருத்து வாடலாமா?
தளிர் மொட்டே எழுந்து வா
என் இனியவளே
புலம்பெயரும் ஒரு புலர்தலுக்கு!

□

## சிறகின் நடுவில் ஒளிரும் வண்ணப்பொட்டுகள்

அங்கேதான் இருக்கிறது
அந்த மருத மர ஊஞ்சல் கிளை
ஆடியபடியே தண்ணீரில்
விளையாடிக் கொண்டிருக்கிறது
என் வீட்டு எல்லையில்
சலனமற்று மெதுவான இசையோடு
ஓடிக்கொண்டே இருக்கிறது
அந்த ஆறு.

கரையோர நாணல் நுனியில்
ஒரு முதிய வண்ணத்துப்பூச்சி
ஏக்கத்தில் நிறைந்து
இன்னும் இறந்து போகாது
எதையோ எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

அதன் கண்களில் தெரியும்
பச்சாதாபம்
திரிந்து திரிந்து
களைத்துப் போனதையும்
காத்திருப்பதையும்
சொல்லிக் கொடுத்து விடுகிறது.

ஆறு மட்டும் ஆறுதல் கூறி
ஆறுதலாய் சலசலப்பற்று
ஓடிக்கொண்டே இருக்கிறது
வெற்று வயிறோடும்
வலி நீங்கா மனதோடும்
இடம் விட்டசையாமல்
அமர்ந்திருக்கிறது.

அதை சுற்றித் துரத்தி
ஆசையோடு பிடிக்க
குழந்தைகளும் அங்கே இல்லை
சிறகின் நடுவில் ஒளிரும்
நிறவண்ணப் பொட்டுகள்
அந்த சூரியத்தணலைக்கூட
மிஞ்சி விடுகிறது.

காற்றையும் கிழித்து
அசைவற்ற சிறகுகளோடு
அது அங்கேதான் அமர்ந்திருக்கிறது
நீ ஒரே ஒரு முறை
பார்த்து வர
முயன்று பார்
அந்த ஆற்றின்
மருதங்கிளை நிழலில்
நாணல் நுனியில் காத்திருக்கும்
வயதான வண்ணத்துப்பூச்சியை!

□

## உதறி எழும் நியாயங்கள்

அது ஓர் அசாத்திய வழியோரம்
இதமான குளிர்தென்றல்
இளையோடி நனைத்துக்கொண்டிருந்தது
அசம்பாவிதம் ஏதும்
நடப்பதற்குச் சாத்தியமில்லை
அவன் ஓசையின்றி
உலகத்தை அசைபோட்டபடியே
நடந்து கொண்டிருந்தான்.

தென்றலின் இதத்தோடு
மெல்லியதாய் நகர்ந்த
பாரத்தைத் தாங்கிய பாதத்தின் சின்னவிரலை
திடீரென்று ஈரம் கசிந்து
உருகிக் கொண்டிருந்தது
உதறி விடப்பட்ட கல்லா?
உதறி எழுந்த காலா?
காயத்தை உண்டாக்கியது
உணர முடியாதிருந்தது.

முளைத்தெழுந்த கல்
புத்திசாலிபோல்
முதுகைக் காட்டி நின்றது
மென்மைப்பாதத்தின்
இரத்தக் கண்ணீர் வடிய
சின்னி விரல்
வாக்குவாதம் புரிந்தது.

தெளிவாய் இரு என்று
கல் புத்தி பகன்றது
தெளிந்து நடந்ததா அந்தப் பாதம்
இருந்தும் காலுக்குக் கோபம்
வந்திருக்கக் கூடாது
ஒரு கணம்
உதைத்துக் காட்டியது.

துள்ளிப் பாய்ந்தது கல்
தூர்ந்து சிதைந்தது கால்
மனசாட்சியைத் தூசு தட்டி
மீள அடுக்கினான்
ஆழ் அகப்பெட்டகத்தினுள்
அப்போதும் உதறி எழுந்து
அடம் பிடித்தது
என் குற்றமல்ல
கல் குற்றமென்று!

□

## காற்றால் அழும் புல்லாங்குழல்

அது மகிழுந்துகளால்
நிறைந்து வழியும் தெருவோரம்
பாதை குறுக்கறுப்புக்காய்
ஆட்காட்டி நிறுத்தற்குறிகாட்டியாய்
நடுத்தெருவில் காட்டி நின்றது
உயிர்ப்பிச்சையிட்ட
ஒற்றை உயிர்நாடி
ஆறாயிரம் மைல்களுக்கப்பால்
ஆறாது அலைந்துகொண்டிருந்தது
உயிர் ஒன்று.

பாதத் தடுப்புகளை அந்த
பாதைத் தடுப்புக் காட்டிகள்
நன்கறியும் போலும்
நடை தள்ளாடிய வேகத்திலும்
அதிக வேகமாய் முறைத்து நகர்கிறது
எனக்கான அந்தப் பொழுதுகள்.

இது மகிழ்ந்திருப்பது
அந்த அலைபேசியின் அணைப்புகளிலென
மகிழுந்துகளுக்கும்
தெரிந்திருக்குமோ என்னவோ.

தடுப்புகளை அழுத்தி
தரையைக் கிழித்துச் சிரித்தது.
உயிரோடு உலாவும் குழந்தைகளை
புகைப்படங்களில்
செல்ல முத்தங்களால் அணைப்பதையும்
விழிக்கரையை அலை அலையாய்
நீர் தொட்டுச் செல்வதையும்
அலை கொண்டு போகும்
காணாமல் போன புகைப்படங்கள்தான் அறியும்.

காட்சிகளில் கானங்களில்
கனவுகளில் கரையும்
காதல்களின் உயிரோட்டங்கள் உணரும்.
அண்டவெளியின்
குளிர் வளியின் சிலுசிலுப்பில்
தவழ்ந்த மெல்லிருளின் நகைப்பில்
வாழ்வின் நகர்தலை வலியுணரும்
இதயம் புரியும்.

வல்லிசையாய் அசையும்
காற்றின் அழுத்தங்களால்
இந்தப் புல்லாங்குழல்
பிய்ந்தழியும் கணங்களை
அறியுமா பிரபஞ்சம்?

□

## அழியாத சுவட்டோசைகள்

அந்த வட்டப்பாதையில்
நடந்து கொண்டிருக்கிறேன்
தொலைவிலே பூங்காவொன்று தெரிகிறது.

அறிமுகமான நினைவலைகளை
மீளப்பெற ஆசை தோணுகிறது.
பெட்டிப் பெட்டியாய் அடுக்கப்பட்ட
பாத நடைப்பாதையில்
விழிகள் மீண்டுவந்து நிலைகொள்கிறது.

வசீகரமான வாழ்வின் பசுமைகள்
வறண்டு முற்றுப்புள்ளி வைக்கிறது.
நடை வேகமாகிறது
என் நரை முடி ஒன்று தவழ்ந்து
கடைவாயில் நுழைகிறது.

அந்த மஞ்சள் கொன்றைப் பூக்கம்பளத்தை
மிதித்தபடியே நகர்கிறது
தள்ளாட்டக் கால்கள்
அடுத்துள்ள அழகான கல்லறைகளின்
குவியல்களைத் தேடி
எனக்கென்னவோ அங்கு சென்றதும்
பெரும் பாரத் துன்பக்குண்டு
கீழே விழுந்தது
அமைதி அடைகிறேன்
ஆத்ம பலம் பெறுகிறேன்.

என்னையும் மீறி
சத்தமிடாதீர்கள் எனச் சத்தமிடுகிறேன்
பூங்காவாய் மலர்த்திய
என் அம்மா உறங்கிக் கிடக்கிறாள்
எழுப்பி விடாதீர்கள் என்கிறேன்.

எதுவும் நடக்காததுபோல்
பிரமித்து நிற்கிறேன்.
அவள் சங்கீதம் மட்டும் இன்னும் இனிமையாக
எதிரொலித்துக்கொண்டே இருக்கிறது!

□

## தடை தாண்டும் தடைக்கற்கள்

எல்லாம் இதற்குள்
சம்மணமிடும்
அன்னையெனும் ஆசான்
அடுத்த அடி நகர்த்தி
முயன்று தவற
ஆசான் எனும் அன்னை
எடுத்தடி உயர்த்தி
தவறி முயல
உருப்படியான உறவு
ஒவ்வொரு கணமும்
ரகசியமாய் நிமிர்த்திவிட
எப்போதும் பிரகாசத்தில்
சுடரென நட்பு சிலகணம்
சுட்டெரிக்கும் தணலாக
சுழன்று மிரட்டும் சூழல்
துயர் விளிம்பில்
தன்னம்பிக்கை வரைய
பண்புகள் அறிந்த குடும்பம்
நேத்திரமாய் நெறி புகல
பாதையோர செம்மண் தீட்டிய தடம்
புரண்டு புரண்டு பாடம் புகட்ட
ஓர் உணர்வுப் புதையல்
ஆணவம் கொள்ள இயலாத
இந்த நம்பிக்கை ஏணிகள்

நங்கூரம் பாய்ச்சி நிற்க
சிகரம் தொட்டு
விண்மீன்களைத் தாவித்தாவி
ஓய்ந்த கைகள்
இன்னும் கொஞ்சம் தூரமாய்
அம்புலியை அளக்கும் முயற்சிகள்
முன்னுக்குப்பின் முரணாக
நுகம் நீட்டுகின்றன
அந்த வானத்தை
நீட்டி நிழல் தரும் வெற்றிக்கு
மழை பொழியாதோ
கல்லெறிக்குப் பயந்து
சுதந்திரப் பறவைகள்
பறப்பதை நிறுத்தி விடுமா என்ன?
தூண்டிலை இட்டதால்
துள்ளல் மறந்து மீன்கள்
ஆழத்தில் ஒதுங்கி விடுமா என்ன?
பறிப்பதற்காக அஞ்சி
மறுநாளில் மலரமாட்டேன் என்று
மொட்டுகள் நிறுத்தி விடுமா என்ன?
காற்றணைத்த தீ
அணை காற்றுக்கு
மீண்டும் மூண்டெழாதா என்ன?
உதாசீனம் செய்து
தூக்கி எறிபவனுக்குத் தெரியாது
உதாசீனங்கள் உயர்வுக்கு ஏணியென்று.
தடைதாண்டி தடக்கி வீழ்ந்து
சிதறிக் கிடக்கும் கற்கள்தான்
சிகரம் தொடும் படிக்கட்டுப்பாதை என்று!

□

## ஊடறுக்கும் பூக்கள்

ஈரத்தோடு அவிழ்ந்த
மல்லிகை மொட்டுகள் போல
ஒரு கவிதையை நீட்டி
வார்த்தைகளைச் சிதற விட்டாய்.

ஆழர்த்தம் தெரியாமல்
இதழ்களை உதிர்த்துக் கொட்டுவது போல
எழுத்துகள் எல்லாம் ஒன்று கூடி
என்னைப் பதம் பார்த்தன
உன்னைப் பங்கப்படுத்தியபடி.

விழிகளை எறிந்து
ஒரு விண்ணப்பத்துடன்
உனை நீட்டியபோது
வெளிச்சமில்லாத உன் கதிர்வீச்சுகள்
பாய்ச்சலின்றித் தவித்தது.

ஏங்கியேங்கி வீங்கிக் கிடந்த
என் இதயத்தை நீட்டியும்
வாங்கித் தூக்க மறுத்தாய்.

கோரப்பார்வைகளால் குத்திக் கிழித்தாய்
அறியாமல் இதயம் கனத்துக் கிடந்தது
வெறும் வாலிபத்தை மட்டும்
விதைத்தவனை ஊடறுத்து
மௌனத்தால் சாகடிக்க
இந்தக் கருகிய மொட்டிற்கு
தெரியாதா என்ன?

அழுகிப்போன காம்பினால்
அவிழ்க்க முடியுமா முகைகளை?

பொய்யின் அபகரிப்பும்
மெய்யின் நிராகரிப்பும்
வஞ்சிக்கப்பட்டவளின்
நெஞ்சின் நெருப்பை விஞ்சுமோ?

□

## என் பிரியத்தமிழ்!

நீ எங்கே வந்தாய்
என்னைக் காவுகொண்டு போக.

உனக்காக காத்திருக்கப் பிடிக்கிறது
உன்னையே பார்த்துக்கொண்டிருக்கப் பிடிக்கிறது.

நரைக்காத
உன் கறுத்த எழுத்தில் உரைத்த
வெள்ளைக் காகித இதயத்தை
பழுது பார்க்கும் இயந்திரப் பொறியியல்
எப்படிக் கற்றுத் தேர்ந்தேன் நான்?

ஒரு மங்குஸ்தான்
பழம் போலிருக்கும்
உன் முகத்தின் அகத்தினில்
இத்தனை இனிப்பா
அதன் சுளை போல
மெல்லென மெல்லென
மெல்லெழுத்தைச் சுவைத்தபடி
வார்த்தைகளால்
வரைந்து போடுகிறேன் என்கிறாய்.

கணிதத்தைக் கட்டித்தழுவிக் கிடந்த
இந்த இத்துப்போன இதயத்தில்
இடம் பிடித்துவிட்டு
கண் கண்ணென்று
சொல்லி மாய்க்கிறாய்
காதல் வழியில்
பார் பார் என்று
கண்ணெறிந்துவிட்டு.

ஒரு முறை
ஒரே ஒரு முறை
உன் உயிரை
அள்ளிப் பருக வேண்டும்

நான்
செத்துப் போகும் முதல்
நிற்கின்றேன் ஒற்றைக்காலில்.

உன் முகம்தேடி அகம் பார்க்க
ஓர் இலக்கியப் பயணத்தில்
அசையும் சீரும்
அளபெடையின் சிறப்புமாக என்னோடு நீ.

ஏன் இப்படி
திகட்டாத அன்பில் திகைத்து நிற்கிறாய்?
நான் தேடித்தேடி தொலைகிறேன் உன்னுள்
உன் கவிதை கலக்காத
யதார்த்த வார்த்தைகள்
என் இதயத்தை
இடம் மாறித் துடிக்க வைக்கின்றது.

பிரியசகியே
சாமத்திலும் காத்திருப்பேன்
நீ வரும் வரை
என்னைக் கொஞ்சம் எண்ணின் கலவையால்
உலர்த்திக் கொள்கின்றேன்
ஒவ்வொரு தாளையும்
என்னை உன்னால் நிரப்பிவிட்டு
மீண்டும் மீண்டும்
கருக்கொள்ள வைத்துவிட
நீ என்ன காமத்துப்பாலா?

விழிகளைக் கொஞ்சம்
உன் நயனங்களால்
நனைத்துவிட்டுப் போயேன்
என் புத்தகக் குழந்தைகளும்
பிரசவத்துக்காக காத்துக் கிடக்கின்றன!

□

## அடுத்த நொடி அதிசயம்

ஓர் அற்புதப் பயணத்தின் நெரிசலில்
சிக்கித் தவிக்கும்
ஈடேற்ற முடியாத உச்ச எண்ணம்
தற்கொலைகளை உனக்குப் பிடிக்காதென்பாய்
அதனால்தான்
ஒரு ஒத்திகைப் பார்த்து
நிசப்தத்தின் சப்தம் கேட்டு
நிலைகொள்கிறது ஏக்கப் பெருமூச்சு.

ஓசையற்ற தீண்டலின்
இனிமையை இதழினில் இருத்தி
அந்த ஆகாயம்
பாடிக்கொண்டே இருக்கிறது
அர்த்தப்படாத
ஒரு தனிமை மரம் போல
மரண ஓசையை
கணத்துக்குக் கணம் ஆடி ஆடி
உச்சரித்துக்கொண்டே இருக்கிறது.

இதுதான்
தேடலில் கடைசி அத்தியாயம்
விரக்தியின் விளிம்பிலும்
எல்லைக் கடந்த உச்சங்களை
இருத்தலில் இருத்திக் கழிகிறது
அந்த அதிசயம் நோக்கி
அடுத்த நொடி அதிசயம்
மரணம்!

□

## விளைந்து கிடக்கும் வெற்றிகள்

எங்கேயோ ஒரு ரகசியம்
ஒளிர் வைரம்போல ஒளிந்துகொள்கிறது.

அது இருள் கலைக்க
எங்கும் சுழன்று தொடும்
அந்தச் சூரியனின் கீற்றுகளாய் இருக்கலாம்.

அல்லது
வேறு ஏதாவது ஒரு
இடையறாத இயக்கத்தைத் தாண்டிய
ஆழ்கடலாய் இருக்கலாம்.

வீழ்ச்சியில் குதித்துத் தவழ்ந்து
பாலையைக் குளிர்த்தி
உப்புக் கடல் நிறைக்கும்
ஒரு நதியாய் இருக்கலாம்

முட்களைத் தகர்த்தி முகையவிழ்த்தும்
ரோஜா இதழ்களாய் இருக்கலாம்.

தண்டுக்குள் நுழைந்து
கனியையும் செருகி வெளித்தள்ளி
கன்று ஈன்று மடியும்
ஒரு வாழையாய் இருக்கலாம்.

வானவில்லைப் பிடுங்கி செட்டை செய்து
வானத்தின் கோணத்தை அளந்த
வண்ணத்துப்பூச்சியாய் இருக்கலாம்

இல்லை வறண்டு வெடித்த
மண்ணினுள் உறங்கி
துளி நீரில் உயிர் நீட்டிய
வீரிய விதையாய்க்கூட இருக்கலாம்.

ஏதோவொரு காலமாதலை மறுக்க முடியாத
இந்தப் பிரபஞ்ச அற்புத இருப்பு
எல்லையற்ற ஒவ்வொரு விளிம்பிலும்
வெற்றியை விதைத்துவிட்டுத்தான் போகிறதோ?

□

## சங்கமிக்கும் வானம்

பூமியின் புன்னகை சங்கமிக்கும்
பூக்களின் வாசத்தில்
தென்றல் வீசாமலா போகிறது?

வானத்தின் நேசம் சங்கமிக்கும்
வரைந்த நிலவில்
குளிர்ச்சி சிந்தாமலா நிற்கிறது?

உயிர்களின் வெளிச்சம் சங்கமிக்கும்
உதயத்தின் சூரியனில்
பிரகாசம் தெரியாமலா இருக்கிறது?

மலையின் வீழருவி சங்கமிக்கும்
உச்சத்தின் கருணையில்
இரக்கம் இல்லாமல் போய்விடுமா?

நதிகளின் நம்பிக்கை
உப்புக்கடலில் சங்கமிக்கும்
காவி மேலெழுந்து நன்னீராய்
மழை பெய்யாமல் போய்விடுமா?

கொட்டிக் கிடக்கும் அழகு
குழந்தையில் சங்கமிக்கும்
மழலை மொழி கேட்டு
மயங்காத மனமும் உண்டோ?
தாய் தந்தையின் பாசம்
இரத்தத்தில் சங்கமிக்கும்
கருவிகொண்டு அதையளந்திட முடியுமா?

தாய் மண்ணின் ஈரம்
உருண்டு தவழ்ந்த உயிரோடு சங்கமிக்கும்
இறந்தாலும் ஆயிரம் காலம்
உணர்வின் உயிரோடிருக்கும்.

மொழியின் மூச்சு
என் சுவாசத்தில் சங்கமிக்கும்
கவிதையில் வாசம் செய்யும் தமிழ்
காலங்காலமாய் காப்பியத்தில் வாசனை வீசும்!

□

## பூங்கொத்துக்குள் மறைந்திருக்கும் கூர் ஈட்டி

பிடிவாதமாய் இருக்கிறது அகம்
கூட இருப்பவர்களிலும்
அவநம்பிக்கையை
நீட்டுபவர்களிடமிருந்து.

நீட்டிய எல்லோருடைய
பூங்கொத்துகளுக்கும் அடியில்
கத்தியின் காயங்கள் மட்டுமல்ல
துருப்பிடித்த உருக்குத் துண்டங்களும்
ஒட்டிக் கிடப்பதையும்
ஒளிந்து கொள்வதையும்
அறியாமல் இருக்க வாய்ப்பில்லை.

உண்மை விமர்சகன்
என் அகத்தினில் உறைந்து கிடக்கும்
புழுதி படிந்த நீரோட்டத்தில்
ஜெயித்துக் கொண்டேயிருக்கும்
எவர் விமர்சனங்களையும்
புறம் தள்ளுவதில் தயக்கமெதற்கு?

அழுகாத அவநம்பிக்கைகள்
அடங்கிக் கிடக்கட்டும்
அது எப்போதாவது அடக்கமாகும்
ஒரே ஒரு தோல்வி போதும்
என்னைப் புதைப்பதற்கு.

எதிரிகளைவிட என்னருகே இருக்கும்
என் நம்பிக்கைவாதிகளிடம்
அவதாரம் எடுத்து அவதானியாகிறேன்
முழு நம்பிக்கையுடன்!

□

## கவியுகன்

அவன் சீவிக்கொண்டே இருக்கிறான்
மூளையை
ஒரு பென்சில் முனை போல.

தனிமைக்குத் துணையாகிப் போனவன்
உயிருக்கு வழி காட்டியவன்
ஏமாற்றங்கள் அவனது மூலதனம்
மூலஸ்தானத்தில் ஞானம்
மௌனத் துகள்களால்
விசிறப்பட்ட நெடி
அவன் அடித்தளம்.

அவன் பிசகும்
ஒவ்வொரு கணமும்
ரகசியமாய்க் கருக்கொள்ளும்
பிரகாசிக்கும் நொடியில்
கவிதைக் கருவறை
உறைதலில் ஊதிப் பெருக்கும்
அம்மணமான அவன் மனம்
ஒருபோதும்
திரையிட்டு மறைத்து வைக்கப்படுவதில்லை.

அவனையே
அவன் பார்வையில்
வாழ்வை அனுபவிப்பவன்
அவன் ரோகத்தில்
ஒரு சித்தம் கலங்கி
அவனே அவனுக்கான நிழல்
தன்னையே வியக்கும்

ஒரு நாய் வாலைப் போல
சுழன்று சுழன்று தொடுபவன்.

ஒரு வெண்நுரை அலை
கரைமண் தொடுவது போல
ஒரு வெள்ளைக் காகிதம்
எப்போதும் துடிக்கும்
கறைப்பட அவனால்
அவன்
மூச்சடங்கினாலும்
பேச்சடங்காதவன்
இருப்பதற்காக இல்லாமல் போகாதவன்.

அவன் ஓர் எழுத்தகராதியை
ருசித்துச் சுவைப்பவன்
சிந்தனையைத் துப்பி எறிபவன்
அவனோடு
கல் பேசும் கடல் பேசும்
மண் பேசும் மரம் பேசும்
மலை உரசும்
நிலவும் உரசும்.

அவனைக் காடு காதலிக்கும்
காற்றும் சுற்றும்
புற்றரை விரகிக்கும்
பூக்கள் இதழிக்கும்
புட்கள் கிரகிக்கும்.

அவன் கூர் வைரக்கல்
குமிழ் முனை ஆணி
ஓர் உளறுவாயன்
உடல் அழிந்தும் உயிரழியாதவன்
அவன் அவனுடையனல்லன்!

□

## மகரந்தங்களைத் துளைக்கும் கண்ணீர்த்துளிகள்

அஞ்சலி கீதத்தை இசைத்தபடியே
இதழ்களைத் திறக்கின்றன அந்த வாசனைப்பூக்கள்.

அவனுக்கு அஞ்சலி செய்வதற்காகவா
அவை கொய்யப்பட்டன?
அவன் அந்தப் பூக்களால்
இன்னும் புன்னகைத்துக் கிடக்கிறான்
உயிரற்ற அவன் மீது தூவப்பட்ட பூக்கள்
அவனின் வாழ்வின் சொந்தங்களா?
இலட்சியங்களின் வைராக்கியங்களா?
அதன் பூரிப்புச் சொர்க்கங்களா?

இல்லை
அவனைக் குத்திக் காயம் தோய்ந்த
முட்களின் வேதனைகளா?
அல்லது அவனையே பார்த்தபடி கிடக்கும்
மௌனங்களை உடைக்க எத்தனிக்கும்
திறப்புக் கோர்வைகளா?
வேதனைகளைத் தீர்க்கத் தடவிய மருந்தா?

அவனை மனிதர்கள் எவரும் பின்தொடரவில்லை
ஆனால் இந்தப் பூக்கள் பின் தொடர்கின்றன
மரணபயத்தை மறைக்க
இறந்த பிறகும்கூட வாசனையை வீசுகிறது
மனிதனின் வாசல் பூக்கள்
அவனைப் போலவே
அவன் சாதனைகளுக்காகவே
தன்னை உதிர்த்துக் கொட்டியபோதும்
ஈரம் உலராமல் பனித்துக் கிடக்கின்றன.

அது அவன் பாச உணர்வுகளா?
உயிர் பிரிந்த பின்னரும் இந்தப் பூக்கள்
ஏதோ உரையாடித்தான் தீர்க்கின்றன வேதனையில்
தம் உடலைக் கருக்கிக்கொண்டு
ஒரு சாதனையாளனின் இழப்பின் வேதனையை
இந்தப் பூக்களின் கண்ணீர்த்துளிகளைவிட
வேறெதனால் உணர்த்திவிட முடியும்?

□

## ஒன்றுமே இல்லாதபோது

மிக மிகதொரு நெகிழ்வுக் காலமாய்
அது இருந்திருக்கலாம்
நீ உதிர்க்க நான் உதிர
ஓர் அதீத தீவிரத்துடன்
பழையவை தாண்டி புதியவை தோன்றி
அமைதி ஒன்றும் தோன்றி இருக்கலாம்.

அந்த அமைதியை
தூக்கிக்கொண்டும் சென்றிருக்கலாம்
ஒரு கூர் கூழாங்கல்லின் நுனியைப் போல
நெகிழ்ந்து காயப்பட்டிருக்கலாம்
இந்த உயிர்களின் தொடுகையில்
நெகிழ்ந்த மனங்களால் ஆற்றிவிட
எம்மிடம் என்ன இருக்கிறது
ஒன்றுமே இல்லாதபோது.

ஒரு பார்வையைத் தடவித் தணித்திருக்கலாம்
ஒரு தணலைத் தரும் நெருடல் கிரகத்தை.

அதுவும் நடைபெறாதிருந்தால்
புதியனவும் பழையதாகலாம்
பழையதும் புதியனவாகலாம்
நீங்கள் உணராதிருக்கக் கூடும்
இந்த உண்மை நெகிழ்தலை
உரையாதிருக்கும் வரை
ஒரு மூச்சில் தெளிந்து நிற்கும்
வாய் அசைவுகளை
கொஞ்சம் பரிசீலித்துப் பாருங்கள்.

அவை எப்போதும் ஒரு நம்பிக்கை ஒளியை
ஊட்டுவனவாக இருக்கட்டும்
தோற்றுப்போகாத வார்த்தைகளைத் தரும்
அந்த மனங்களைக் கண்டுபிடிப்பது
மிகக் கடினமானதாக இருக்கக் கூடும்.
இருந்தும்
சாகும் முன் தொலைத்த நம்பிக்கைகளை
ஒரு சாவில் தந்துவிடவும் கூடும்
நண்பன் எனும் பகைவனால்!

□

## அச்சேற்றப்படாத நாவல்

அது
அச்சிடப்படாத வார்த்தைகளின் கதை
பக்கங்களின்றி புரள்கிறது என்னுள்
புரட்டிப் புரட்டிப் பார்க்கிறேன்.

கண்ணுக்குத் தெரியாத கண்ணீர்த்துளி
உள்ளம் நனைக்கும் ஒரு புன்னகை
காதலில் கமழ்ந்த வேகமும் மோகமும்
கடந்தும் கடக்காத மோதலும் சாதலும்
காணாமல் போன நட்பும் பாசமும்
பிரிவும் சேர் உறவும்
இன்னுமின்னும் இனம்புரியாத கதைகள்
அதன் வாதைகள்.

தொட்டுத் தொட்டுக் கதை பேசும்
ஒரு பாலைவனமும்
நதிகளைக் கௌவும் உப்புக் கடலும்
வீச மறந்த பூங்காற்றும்
கீறிக் கிடக்கிறது அதனுள்.

அதன் கதையைப் படிக்க
எத்தனிக்கும் போதெல்லாம்
ஏக்கம் தொனிக்கும்
வருத்தம் பீய்ச்சிடும்.

இப்படியா எழுதி வைப்பது
முதலில் இருந்து முடிவு வரை?
நீண்ட வலிகளையும்
நிற்காத சோகங்களையும்
திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்கிறேன்.

நான்தான் அதன் நடி பாத்திரம்
அதற்கு நான்தான் ஆஸ்தான உறவு
கொடிய வலிகளை எப்படி நடிப்பேன்?
பார்த்துப் படித்துவிட்டு
ஒரு நகராத பாத்திரமாய் நிற்கிறேன்.

வாங்கும் ஒவ்வொரு அடியும் விருதுகள்
தேங்கும் அத்தனை கழிவும் விருப்புகள்
அடங்கிக் கிடக்கும் அன்பும் மூர்க்கமும்
பிடித்ததும் பிடிக்காததும்
அதற்குள் முடங்கிக் கிடக்கும்
மொத்தத்தையும் சேர்த்து
எத்தனையோ அத்தியாயங்களாய்
பிரித்து வைத்திருக்கிறேன்.

ஆனால்
அது அச்சிடப்பட முடியாத கதை
ஒரு வேளை அச்சிடப்பட்டால்
ஒரே ஒரு முறை வாசித்துப்பார்.

ஒரு முட்டாளின் தீராத வலி
ஒரு மனிதத்தின் அடங்காத பசி
ஒரு நிசப்தத்தை
சப்தமிட்டுக் கிடக்கும் நிமிடம்!

□

## மலைகளை நகர்த்தும் பேரன்பு

இங்கே சொல்லவொணாத் துயரங்கள்
நம்பிக்கையைப் பிய்த்துக் கிழித்து
நங்கூரம் இடுகிறது.

புலப்படாத பொழுதுகளின்
கூர் நகங்களைக் கொஞ்சம்
கொய்து விடுங்களேன்
பயங்களின் பேரலைகளோடு
ரணங்களில் படுத்துறங்கும்
துடிப்புகளை இழுத்துச் செல்லுங்கள்.

அந்த நுனிகளில்
தூக்கத்தைத் தொலைத்து
பூந்தோட்டப் பாதைகளை
புதை குழிகளாக்கியது போதும்.

ஒவ்வொரு இழப்பிலும்
நல்லூக்கக் கனவுகள்
நழுவி உடையும் போதெல்லாம்
சின்னச் சின்னதாய்
சொர்க்கம் செத்துப் போகிறது.

வாழ்வை உயர்த்தும்
ஒரு பேரன்பு
அந்த மலைகளையே நகர்த்தும்
பெரிய விருட்சங்களையே பெயர்க்கும்!

□

## உயிர்ப்பின் உயிர் எங்கே?

சிங்கங்கள் நுழைந்த இதயங்களில்
ஒரு சிற்றெறும்பாய்
கூடாரமடிக்கும்போது
அந்த வீட்டின் உரசல்களில் எரியும்
உறவுகளின் காப்புறுதியற்ற ஒப்பனைகள்
அழுகையையும் இயலாமையையும் புதைக்க
சதுர அடிகளில் அறை தேட முடியுமா?

நான் அனுப்பிய
கண்ணீர்த் துளிகள்
நண்பனின் உணவிற்கு
உப்புத் தயாரிக்கவா?

கல்லறை நாடிய பிணமும்
களவாடப்படுமா?
இரவிலும் நிழல்கள் பின்தொடருமா?
பாறைகளில் பாதம் பதித்துவிட்டு
சுவடுகளை மணலிலா தேடுகிறோம்?

நூலறுந்த பட்டத்தைத் தொலைத்துவிட்டு
வாலறுந்ததற்கு வருத்தப்படலாமா?
வயோதியங்களை மூச்சடக்கிவிட்டு
சுதந்திரக் காற்றை
சுவாசச் சிறையிடலாமா?

□

## ஆழக்கிடக்கைகளில் திரும்பிய எழுத்துகள்

நீருக்கடியில் நிச்சலனத்தில் இருக்கும்
இரு கூழாங்கற்களின் நுனிகளைப் போல

ஒரு மரக்கிளையினூடு
ஊடுருவித் தழுவும்
நிலவொளியில் அகப்படாத
இலைகளின் நிழலைப்போல

ஒரு வனாந்தரத்தைப் பசுமையாக்கும்
அருவி ஓடையின்
மழைக் கீற்றுகள் போல

பகலின் வலிகளைத் தாங்கி நிற்கும்
அந்தக் குளத்தில் மலர்ந்த
ஆம்பல்கள் போல

பருவக்காற்றின் காரணமாகக்கூட
தூக்கி வீசப்படாமல் இருக்கும்
காலத்தின் களங்கமின்மை போல

இன்னுமொரு மரத்தடியில் அமர்ந்து
இளைப்பாறிக் கொள்ளும்
சிறகுகள் ஒடிக்கப்பட்ட தேன்சிட்டுப் போல

உயிர் சிலிர்க்க
உதிர்த்துக் கொட்டியபோதும்
ஈரம் உலராமல் பனித்துக் கிடக்கின்றன
எப்போதும் உடையாத இரசக் குமிழிகளாக
எடுத்து வந்து சேரும்
எழுத்துகளைவிட கனக்கிறது
சேர்த்துக் கோர்த்துக் கட்டிய
ஆழக்கிடக்கைகளில் திரும்பிய எழுத்துகள்!

□

## எதைக்கொண்டு நிரப்பிவிட முடியும்?

அந்த நெடுஞ்சாலை
அந்தி வானம் சிவந்து விழ
மேகமூட்டத்துடன் மோதுண்ட கணங்களை
நனைத்துக் கிடக்கிறது.

மயக்கும் சூழலில்
ஒரு நயனம் சயனமிட
அது கிழக்கின் நீளமான கடற்கரை போல
அமைதியாக அமர்ந்து விடுகிறது.

ஒரு நதியில் நீராடி
கூந்தலை ஈரம் துவட்டாமல்
கோதுமை வயல்கள் சிலிர்க்க
பூக்கள் சிரிக்கிறது.

எடுத்துப் பார்த்தால்
உடைந்து விடுமோ என
வெளிவர முடியாத மௌனங்களை
ஏந்தி வரைந்தது ஓர் ஏகாந்த நினைவு.

ஒரு மலையருவியை
சரித்து ஊற்றினாலும்
நிரம்பாத அதன் தனிமையை
எதைக்கொண்டு நிரப்பிவிட முடியும்?

□

## மகுடம் சூட்டும் மௌன முட்கள்

ஒரு சிலுவை வேடத்தில்
முழுமையாக அறைந்து விடலாம்
ஒரு முள் மகுடத்தால்
வாழ்த்தையும் சூடிவிடலாம்.

ஒரு வார்த்தைச் சவுக்கால்
அடித்து விளாசி விடலாம்
அடுத்தவன் கையால் அடிபடல் என்பது
சிவப்புத்தணலை உடைத்துப் பார்ப்பது போன்றது.

இது என்ன கிழித்துப் பங்கிட
நம்பித் தயக்கம் காட்டும்
பொய்களின் பிரதிகளா?
இப்போதெல்லாம் பதில் என்ன?
கேட்டால் பாவத்தின் சமாதிகள்.

கொத்திக் குதறும் கழுகுகளை
மனங்களின் சாக்கடையில் இருந்து
கொஞ்சம் தூரமாக்குங்கள்
பேராவல் கொண்டெழும்
முளைத்த சிறகுகளோடு
மீண்டும் ஆரம்பிக்கலாம்
ஒரு நீண்ட பயணத்தை.

மிக மிகக் காதலன்போடு
கூடக் கைக்கோர்த்து வருகிறேன் நான்
உயிரின் ஆயுள் நொடிவரை!

□

## கருவறை

என்ன கொள்ளை அழகு.
எங்கள் மல்லாவி மண்ணின்
எழிலுக்கு எழில் கூட்டும்
எண் எழுத்து விஞ்ஞான
கல்விக் கலைக்கூடம்
அ.த.க பாடசாலை
மகா வித்தியாலயமாகி
இன்று அழகான மத்திய கல்லூரி
அதற்கும் மேல் தேசிய பாடசாலை
அற்புதமான வளர்நிகர் உயர்ச்சி.
ஆகா
அந்தப் பொற்காலம்
மனதில் என்றும் அழியா கற்காலம்
தலைமைக்கே மெருகு சேர்க்கும்
மயில்வாகனம் வாத்தியார்
அவரோடு தோள் கொடுக்கும் நடராசா சேர்
பாலர் வகுப்பில்
அணைத்துப் பாலூட்டி வளர்த்த
சண்முகநாதன் ரீச்சர்
தமிழ் வளர்த்த விஜயபாலா சேர்
கணிதத்தைப் புனிதமாக்கி
சுளுக்கெடுத்த சக்திவடிவேல் சேர்
விஞ்ஞானத்திற்கு விதையிட்ட
ராஜதிலகம் ரீச்சர்
ஆங்கிலத்தின் தந்தை

கதிர்காமநாதன் சேர்
அவரோடு இணை நின்ற
அழகான ஹேமா ரீச்சர்
சமயத்தில் மல்லிகா ரீச்சர்
சமூகக்கல்வி ஆனந்தி ரீச்சர்
விளையாட்டின் பாக்கியநாதன் சேர்
தொடர்ந்து சிவபாலன் சிவராசா அதிபர்கள்
உயர்நிலை ஆசான்கள்
சர்மா சேர் வேதநாயகம் சேர்
இந்திரலிங்கம் சேர் சிவகுரு ரீச்சர்
தயா ரீச்சர் வடிவேல் ரீச்சர் பேபி ரீச்சர்
என அடுக்கடுக்காய்
வளர்ச்சிக்கு வித்திட்ட முத்துகள் இன்னும் பலர்
எங்கள் வாழ்வில்
வழி காட்டிய சொத்துகள்
ஆரம்பித்த அதிபரறை
அதனோடிணைந்த களஞ்சியமும்
அதனுள்ளே அடுக்கடுக்காய் இருக்கும்
அறுகோண வடிவ விசுக்கோத்துப் பைகளும்.
புத்தம்புதுப் புத்தக அறையும்
புதிதாக முளைக்கும்
வகுப்புகளை ஏந்தி நிற்கும்
மகா மண்டபமும் தொடர்ந்து நீண்டு நிலைத்து
அதிபர் பார்வையை நிலைக்க வைக்கும்
நீள் விறாந்தையும்
நினைக்க நினைக்க நெஞ்சில்
தித்தித்திக்கும் நினைவுகள்.
சமாந்தரமாக அமைந்த வகுப்பறைகள்
இடையே சந்திக்கும் பூந்தோட்டங்கள்
ஒழிந்து கிடக்கும் உயிர்க்காதல்கள்
உணர்வோடுறைந்த மாவீரர் நிகழ்வுகள்
மனதை உலுக்கிய மரணங்கள்
ரணமாக சிதைக்கும் சில நினைவுகள்.
வாசலில் வரவேற்றுச் சிரித்து நின்ற
பென்னம்பெரிய ஆலமரம்.
மைதானத்தில் நிழலித்து நிற்கும்
பிஞ்சிலிருந்து பழம் வரை

கல்லெறி வாங்கித் தாங்கி நிற்கும் புளியமரம்
இந்திரவதனி அக்காவின்
நினைவுத்தூபியாய் அமைந்து நிற்கும் அரங்கு.
எப்போதும் நிறைந்து நிறையும்
தேனிலும் இனிய தண்ணீர்க்கிணற்றடி.
இன்னும் எத்தனை எத்தனை
நினைக்க நினைக்க
நெஞ்சில் தேனூறும் கற்பனைகள்.
என் பாலர் முதல் தொடர்ந்து
இன்று பிரதிக்கல்விப்பணிப்பாளர் வரை
வளர்த்த அழகான அரண்மனை.
தமிழ் எல்லாளன் சங்கிலியன்
தலைவன் பிரபாகரன் வழி நகர்ந்த
கல்விக் கலைத்திண்ணை.
என்ன அழகு.
ஓங்கி ஒருக்களித்து
சிரித்துச் சிங்காரித்து நிற்கிறது.
ஆழ்மன சிந்தனையில்
அறுகம்புல் வேரோடி நிற்பது போல
பார் எல்லாம் ஒரு கணம் நிமிர்ந்து பார்க்க
பற்பல கல்விமான்களை பிரசவித்தப் பெருமை
இந்தத் தமிழ்த் தாய்மைக்கே.
என்றென்றும் இந்தத் தாயின்மடியில்
பாலூட்டி வளர்ந்த நன்றிக்கடனோடு!

□

## உன்னதத்தின் வாயில்கள்

இங்கே மொட்டு விரிக்கும்
ஒவ்வொரு பூவின் கம்பளத்தினுள்ளும்
ஒவ்வொரு சாவின் பூச்சிகள்.

கோடிப் பூக்களைத் தாங்க
கோடி கோடியாய் முட்கள்.

ஒரு கற்பாறையில்
சிம்மாசனம் வைத்து
வாழ்தலைக் கடத்தல்
இலகுவாய் இருக்கிறது.

சமாந்தரமான
பிரபஞ்ச உன்னதத்தின் வாயில்களைத்
திறக்கும் சாவிகளைத்
தொலைத்துவிடவில்லை.

அது அழைத்துச் செல்கிறது
காற்றில் சமரசம் செய்யும்
நீண்ட புல்வெளிக்கு!

□

## வெறுமையால் நிரம்பிய கோப்பைகள்

இந்தக் கோப்பைகள்
எப்போதும் நிறைந்து கொள்வதற்காகவே
வெறுமையாய் இருக்கிறது.

ஒரு வேளை
வலிகளால் நிரப்பப் படலாம்
உன்னதமான அன்பால் நிரப்பப் படலாம்
வாழ்க்கையால் நிரப்பப் படலாம்
இனிய ரசத்தால் நிரப்பப் படலாம்
வெறுமையால்கூட நிரப்பப் படலாம்.

இல்லை இன்னும் அதிகமாக
வெறும் வறிய வார்த்தைகளாலும் நிரப்பப் படலாம்.
எப்படியாவது நிரப்பிவிட வேண்டும்
என்று நினைக்கும்படியாக
ஒரு வாழ்க்கை நகர்ந்து
முடிந்து கொண்டிருக்கிறது.

ஆக நிரப்ப நிரப்ப
அது மீண்டும் மீண்டும்
வெறுமையாக்கப்படுகிறது.

காலம் காலமாகிக் கொண்டு
ஒரு காலத்தினுள் உள்நுழைந்து விடுகிறது.

அது ஒரு சிறியதா
அது ஒரு பெரியதா
அது ஒரு சிறந்ததா
எதுவும் கூறுவதாக இல்லை
கூற முடியாததும் இல்லை.

அப்படி இல்லாமலும் இருக்கக் கூடும்
ஏன் இவ்வாறும் இருக்கக் கூடும்.

ஒரு கவிஞனின் உணர்வு கசக்கிய
கசாயத்தாலும் நிரப்பப் படலாம்!

□

## நினைவுத்தூசிகளை எரிக்கும் நிலா

சிறகசைப்பில் வண்ணத்துப்பூச்சிகள்
பூக்களின் வாசனையை கவர்ந்து செல்கின்றன.
ஓர் அருவியின் சத்தத்தில்
முகவரி தேடிய ஈர நாணல்கள்
தலைகோதிச் சுழிக்கின்றன.

அது காதைக் கிழிக்காது
கணங்களைச் சுவைத்துக் கிடக்கின்றன.
ஓர் ஆதியும் அந்தமும்
ஆரம்பமின்றியே முடிந்து கொள்ள
குன்றாக உயரும் பாறை மனங்கள்
இறுகி நிலைக்கின்றன.

ஓர் இரவும் பொழுதும்
கைக்குலுக்கி வானம் வெளிக்கிறது.
நினைவுத்தூசிகளை அகற்றி நிலா எரிக்கிறது.

மனிதம் படாத ஒரு பெருவெளியில்
இரவின் நீட்சிகள் கழிந்து விடுகின்றன.

அறை நிரப்பி மூச்சை அடைக்கும்
ஒரு விடக் கண்டன்
விடாக்கண்டனாய் துரத்துவதை
மரணத்தின் மின்னலைக் கையேந்தி
நகர்கிறது இன்னுமொரு பொழுது.

மென்மையான வெண்ணிறப்பூவால்
பனித்துளிகளைப் போர்த்தி
துளி விடத்தை கரைக்க முடியுமா என்ன?
பேரன்பைக் கொட்டிச் சாய்க்க
விடமும் துரோகமும்
தலை குனிந்து நிற்கிறது.

ஓர் ஆகச்சிறந்த ஆரம்பத்திற்காக
மீண்டும் ஆரம்பிக்கலாம்
தூரம் செல்லாத நினைவுகளை மனசேந்தியபடி!
□

## காலப் பூச்சிகள்

ஒரு நதியில் இழுபடும்
கல் போல
தீர்க்க தரிசனங்களோடு
நகர்ந்துகொள்கிறது
காலத்தின் பூச்சிகள்.

பேரழகோடு
பேசிக்கொண்டே இருக்கும் அதிகாலைக்காக
மூச்சை இழக்கிறோம்.

கோடிக்கணக்கில் விண்மீன்களோடு
விழித்துக் கிடக்கிறது வானம்.

ஒற்றை மின்மினியின்
பேரொளியை வீசி
நூற்றுக்கணக்கான துக்கங்கள்
துடைத்தெறியப்படுகின்றன.

ஒரு பிரயாசையில்
பேருந்து ஒன்றின் உராய்வுச் சத்தம்
ரயில் ஒன்றின் அறைகூவல்
மீட்டுவிட்டுச் செல்கிறது
எங்கும் நிரம்பிய
ஒரு புல்லாங்குழல் இசையை!

□

## எண்ணங்களுக்குத் தூரப் போனால்...

*யார் இருக்கிறார்கள்*
*யாரோடு இருக்கிறார்கள்*
*யாரோடும் இருக்கிறார்களா?*

ஒரு பூவின் வாசனை
ஒரு காரணமும் இல்லாமல் நுழைவதைப்போல
முதலும் முடிவுமற்ற ஒரு தேடலுக்காக
யார் யாரோடு இருக்கிறார்கள்?

நினைவுகள் பல இடங்களில்
தூசுகளையே தாங்கி வருகின்றன
ஆனால் அவை உண்மையில்
அப்படி இருந்திருக்காது.

வீசும் காற்றில் தூசு இருக்கத்தான் செய்கிறது
சுவாசிக்காமல் இருந்துவிட முடியுமா?

துரோகங்களைப் பழக்கப்படுத்தி இருந்தால்
தூசுகள் பெறுமதி அற்றவை
உடனேயே புலப்பட்டு விடும்
இந்த வாழ்வின் முக்கியத்துவம்
எப்படி நுழைத்து விடுகிறது இந்த மனிதர்களால்.

உணர்ந்துகொள்ளும் நிலையில்
அதை ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள்
ஒரு நீரைப்போல எங்கெல்லாம் இடம் பிடிக்கிறதோ
அங்கெல்லாம் ஓடி விடுகிறது மனங்கள்.

யார் வருகிறார்கள் வருவார்கள்
யார் போகிறார்கள் போவார்கள்
அறிந்து கிடந்தாலும்
அனுபவத்தில் அறிவதாயில்லை.

எல்லாம் உணரப்படும்போது
இல்லாமல் போய் விடுகிறோம்
அந்த வானத்தை அளக்கும் வண்ணத்துப்பூச்சியின்
சிறிய சிறகுகூட இல்லாமல் போய் விடுகிறது.

எண்ணங்களுக்கு இன்னும் தூரப் போனால்
ஒன்றுமே இருக்காது!

□

## இன்னும் இருக்கின்றன

அந்த முகமூடிகள்
அவர்களுக்கானதல்ல.

வருபவர்கள்
வந்தவர்கள்
போனவர்கள்
இருந்தவர்கள்
இருப்பவர்கள்
யாவருக்குமானதே.

தேடியது கிடைத்த வெற்றியில்
எடுத்து அணிந்து விடுங்கள்
மீண்டும் ஏன் விட்டுச் செல்கிறீர்கள்?
இது விற்பனைக் கூடமல்ல.

ஒவ்வொரு நிறங்களிலும்
ஒவ்வொரு அளவுகளிலும்
ஒவ்வொரு வடிவங்களிலும்
ஒவ்வொருவருக்குமானதே.

எங்களுக்கான காலம்
கழிதலின் முன்னரே
கழற்றி வைக்காமல்
அணிந்துகொள்ளுங்கள்
நான் கைக்கோர்க்கிறேன்!

□

## துரோகத்தின் நிழலில்

இங்கே திரை கிழிக்கப்படுகிறது
பல நிழல்கள்.

நிழல்களுக்கு
குரல் இருப்பதில்லை.
அதே குரலுக்கு
நிஜமும் நிழலும்
இருந்தே விடுகிறது.

கண்களைக் கட்டி
கடைசி மூச்சு வரை
அடித்து உதைத்தாலும்
புலி புல்லை ருசிப்பதில்லை.

ஆசுவாசமாய்
கொட்டிவிட்டுப் போக
இது ஒன்றும்
குப்பைத் தொட்டி அல்ல.

ஆயிரம் சுத்தியல்களால்
அறையப்பட்ட ஒரே ஆணி
பென்னம்பெரிய சுவரையும்
துளையிட்டுத்தான் திரும்பும்.
அந்தத் துளைகளால்
உண்டான வடுக்களை
எந்தச் சுத்தியலாலும்
நிரவிவிட முடியாது!

□

## வேதனைகளில் விரியும் வாழ்க்கை

ஓர் அச்சம் கலைந்த நிதானத்தோடு
ஒரு வாழ்வை யோசிக்கத் தோன்றுகிறது.

தொடரும் பாதைகளின் ஓரத்தில்
ஒரு செடிகூட முளைப்பதாயில்லை
ஆனால் மரம் வளர்ந்து விடுகிறது
உள்மனதின் அடிவாரத்தில்
அதில் வேண்டாத பறவைகளும் வந்து
நிழல் தேடி விடுகின்றன.

ஒரு மண்ணின் மறைப்பில்
ஒரு கடலின் தரையில்
ஒரு ஆகாயத்தின் வீதியில்
இடம் மாற்றிக்கொள் என்கிறது உயிரை.

யாரோ ஒரு போதனையில்
நடக்கும் பாதையோரத்தில் ஒருவர்
அவர் யாரோ ஒருவரென்று
எப்படிக் கூறுவேன்?
இந்தச் சந்திப்புகள்
நிறுத்தற்குறிகளை ஏந்தி
வரையறுத்து நிற்கும்போது
வாழ்க்கை முடிந்து விடுகிறது.

வாழ்வைப் பற்றியதாக
வேறு எதுவும் இருப்பதாக
எப்படிச் சிந்திக்க முடியும்?

□

## சாகத் துடிக்கும் பூக்கள்

கடலுக்கு அடியில்
ஓர் அக்கினி ஊற்று
கண்ணீரில் உப்புக் கடல்.

சோலையின் கிளையசைக்க
சொல்லாமலேயே தீண்டும் காற்று
இசைக்க மறந்த இளங்குயிலின்
மௌன ஓசைகளின் வாசம்.

எப்படியாவது
தினமும் மலர்ந்து
தினமும் கருகும் பூ மொட்டுகள்.

உதிராமல்
சேர்ந்தே பூக்களையும்
காயப்படுத்தும் கூர் முட்கள்.

உதிர்த்துக் கொட்டியபோதும்
அழுது தீர்க்காத குருவியின் இறகு.

எல்லாம் கடந்தவை
இந்தப் பூக்களின் சிரிக்கும் கணங்கள்
பூஞ்செடிகளின் உயிரழிந்த
சொற்பகால மகிழ்ச்சித் தீண்டல்களின்
மௌனக் கொண்டாட்டங்களா?

□

## வாழ்வைக் கடத்தும் வினாக்கள்

அச்சத்தில்
எந்தச் சோதனையிலும் இழந்திடாத
நம்பிக்கையில் தோன்றுகிறது
சொர்க்கத்தின் கதவுகள்.

பல்லாயிரம் வீச்சுகளிலும்
தலைகுனிந்தவனுக்கு
யார் வந்தால் என்ன
யார் போனால் என்ன?

உண்மை காண இருத்தலில்
யார் யாருடையவர்
யாருக்காக யார் இருப்பர்
ஒரு தூய்மையைத் தவிர
எவரும் அல்லர்.

உயர்வோ தாழ்வோ
மகிழ்வோ துக்கமோ
அன்போ பிரிவோ
ஒரு ஞானத்தை
போதித்து விடுகிறது.

இறகு முளையாத குஞ்சொன்று
துடிதுடித்த இறகுப் படபடப்பில்
தொலைகிறது துயரம்
காயங்களின் இறுதியில்
பறத்தலோடு நிறைகிறது
வாய்ப்பும் பக்குவமும்.

வினாக்களும் விடைகளும்
வாழ்தலின்
கவனமாகக் கடத்தல் என்பதே!

□

## மௌன நதியில் மிதக்கும் புன்னகை

எந்தப் பறவைகளும்
இளைப்பாற சோலை தேடுவதில்லை
சந்தோஷ சங்கீதங்களை
இசைத்து விடுவதாக மூங்கில் காடு
ஒருபோதும் பெருமைப்பட்டதில்லை.

ஓடி வந்த நீள்நதி
நாணலிடம் அனுமதி கேட்டா
தொட்டுத் தாலாட்டுகிறது
மனிதர்களால் உயிர்பெற்ற வீடு
மௌனங்களால் மட்டும்
ஏன் தலை குனிகிறது?

இனியெப்போதும் மறக்காதிருக்குமாறு
யாரும் கவனிக்காத ஒரு பின்னிரவில்
பெரும் பரபரப்போடு
மழை சப்தமின்றிப் பெய்துவிட்டுப் போகிறது.

யாரையும் மிச்சம் வைக்காமல்
கடைசி மூச்சின் உந்துகையோடு
பாகுபாடு ஏதுமின்றி
பெய்த அந்த மழை போல
மீதமாய் உள்ள சமுத்திரத்தில்
ஒற்றைத் துளியாய் நிறைக்கும் அன்போடு
யார் இருக்கிறார்கள்?

எந்த வன்முறையும் பிரயோகிக்காத
கரையில் உறங்கித் தரையில் விழுந்து
மௌனமாய்க் கடக்கும் நதி போல
ஒரே ஒரு கீற்றுப் புன்னகை போதுமே!

□

## முத்தாகும் ஒற்றை மழைத்துளி

சிந்தனைகளின் வழியில்
வடிகால் நீட்டுபவை
வெற்றிகள் என்றால்
எத்தனை சுபிட்சமான தோல்விகள்
நங்கூரம் பாய்ச்சி நிற்கும் தெரியுமா?

நடக்குமா என்று நினைக்கிறோம்
நிழல்கள் எத்துணை நம்பிக்கையில்
பின் தொடர்கின்றன நம்மோடு.

கடப்பாறை அத்திவாரம் கிளப்புமா?
சிப்பி வாயில் வீழ்ந்தபடியால்தான்
மழைத்துளி முத்தாகியது.
துகள்கள் பிரவாகித்து தூணாகிறது
உலகில் உயர்ந்தவன்
உலுக்கிய தூசானவனே.

ஒவ்வொரு தோல்விகளிலும்
புதைந்து கிடக்கும்
இரகசியப் பொக்கிஷத்தை
வெல்லும் முயற்சிகள்
அறிந்துவிடக் கூடும்.

வெல்லப்படாதவை ஒருபோதும்
தோல்விகள் என்று பொருளல்ல.

நம்பிக்கைத்துளி
புதைந்து முளைக்கிறது
வீழ்ச்சிகள் எழுச்சியின் பாதங்கள்
அந்தியும் வீழ்ந்ததால்தானே
முந்தி விழிக்கிறது அதிகாலையில்!

□

## துயரக் கடலின் அகதிப் படகு

என்
நேச அகதிகளுக்கு வணக்கம்.

இதற்கு முன் இப்போது
இன்னும் இனியும்
என்னூரில் அகதியானவர்களின்
பட்டியலில் நீங்கள் உள்ளீர்களா?

ஆயின்
எல்லோரும் சொல்லி முடிக்காத வார்த்தைகளில்
வழிந்து கரைகிறது துயரக் கடல்கள்.

மண்ணைக் கிளறி
மகன் மகள் பிஞ்சுகள் என
முழுவதுமாய் வேர்கொள்ள
நட்டுவிட்டு வந்தவர்கள்.

உப்புநீர் குடித்து மக்கி
இற்றுப்போன குழந்தைகளின்
வாழ்வறா உறக்கப் புன்னகைகளால்
தேம்பியழும் தெரிந்தவர்கள்.

ஒளித்து ஓடி வந்து
காரணம் காட்டி தஞ்சம் புகுந்து
பணம் முளைத்த வயல் காளான்கள்.

இத்தனை நடுவே இருந்தும்
சொல்லிவிட வேண்டும்
உயிர் கொண்டலையும்
நானும் ஓர் அகதியென!

□

## எப்போது வரும் என் தீபாவளி

மூலை வீட்டு அருணாசலம் அண்ணன்
சூளையில் அடுக்கிய பெரிய வாய் பானை,
அதனுள் முட்ட முட்ட
அம்மா காய்ச்சி வடித்து இறக்கிய
பாலியாற்று நீர்க் குடித்துப் பருவமெய்திய
அப்பாவின் கரும்புள்ளியான் வயல்
ஐநூறொன்று முத்தரிசிச் சோறு

முழங்காவில் பண்ணையில் வளர்ந்து
இளம் பிஞ்சுக் குழந்தைக் கால் போல
மரவள்ளிக்கிழங்கு சேர்
முற்றத்தில் காய்த்த
டுபாய் பூசணிக்காய்க் கறி
தோட்டத்து வேலியில் எட்டிப் பிடுங்கி
வெறும் உப்பு வெங்காயத்துடன்
முன் பாலில் வதக்கிய
முருங்கைக்காய்ப் பிரட்டல்

மல்லாவிச் சந்தையில்
அப்போதுதான் பிடுங்கி வைத்த
வெண்டிப் பிஞ்சுப் பால்கறி
மன்னார் தொடுகடலின்
விடத்தல் தீவு கண்ட
தங்கராசு அண்ணன்தரும்
கருங்கண்ணிப் பாரை மீன்
தடித்த குழம்பு
தசைத் துண்டுப் பொரியல்

எல்லாம் சேர்த்து
ஒரு கவளம் உருட்டி
சாப்பிடு சாப்பிடு என்று
அந்தச் சீமாட்டி
வாயினிக்க நீட்டிய தீபாவளி
மறுபடி எப்போது வரும்?

□

## மரணத்தின் மின்னலைக்
## கையேந்தி நகரும் எரிமலை

இறுகிய கதவுகளை
மென்மையாகத் திறப்பது போல
கடக்கும் விசனமின்றிய
கடல் ஆழங்களைக்
கொஞ்சம் கொஞ்சமாய் நீந்துவது
சுலபமாய்க் கிடக்கிறது.

சூழ்ச்சிகளை மறைத்து வைத்திருந்த
பாறைகளில் பாதம் படிய
மரணத்தின் மின்னலைக் கையேந்தி
நகர்கிறது இன்னுமொரு
எரிமலையின் சீற்ற நிகழ்வு.

கலைந்து கிடக்கும்
வெண் மேகத்திரள்களை
அள்ளி அள்ளி சேர்த்துக் கலக்க
காடுகளாய் நீண்ட தொடர் மலைகளின்
இமைத்துடிப்பில்
விழிகளை மையம் இடுகிறது மனம்.

எத்தனைக் காலைகளைச் சுவாசிப்பது
இப்படிக் கேள்விகளை எழுப்பி
விடைகளைத் துயில்கொள்ள வைத்து.

எனக்கான ஒரு பாறையின்மீது
உலகில் இருந்து விடுபட முடியாத
என் குரலை இருத்தியபடி!

□

## சூரியனைப் பரிசளிப்பேன்

துயரங்களால் அறையப்பட்ட
அந்த ஆதி இரவுகளில்
வெறும் துரோகங்களால்
வளர்க்கப்பட்ட சிறகுகளை
பற்றி இருக்கிறேன்.

நம்பிக்கைப் பறவைகள்
பறக்க முடியாதபடி ஆணியறையப்படுகின்றன.

காற்றின் கைகளை வலிமையுடன் புரட்டியும்
ஒரு சூரியனற்ற இருட்டைப் பரிசளிக்கின்றன.

நானோ ஒரு சூரியனைத்
தேடிக்கொண்டிருக்கிறேன்.
இரவுகள் சருகாகிக்கொண்டு
ஒரு சிலுவையைச் சுமந்துகொண்டு
கடல் நீரை
ஒரு குவளையில் முகர்ந்து குடிக்கிறேன்
வலிகளைத் தாங்குவதற்காய்.

அவர்களோ ஒரு துப்பாக்கி வேடத்தில்
சுழன்று கொண்டிருக்கிறார்கள்.
காலம் கிளை முறித்துப் போட்ட நேசத்தை
வேர் அறுத்துப் பிடுங்கிய வானத்தை
நீட்டும் அவர்களுக்காய்.

நான் எப்படியாவது
ஒரு சூரியனைப் பரிசளிப்பேன்!

□

## அன்பன்றி எதுவுமில்லை

நேற்று இறந்து விட்டதாக
என் உயிர்
இன்று இறந்து கொண்டிருக்கிறதாக
என் உடலும் உள்ளமும்
நாளைப் பிறந்து கொண்டிருப்பதாக
என் உணர்வும் உயிருமென
மனித ஆன்மாவாக
நான் கூக்குரல் இடுகிறேன்.

எந்த இதயம்
செவி மடுக்கிறது
எந்த இதயத்தில்
அது புரிந்து கிடக்கிறது
எந்த இதயம் அதை விடுத்து
விலகிவிட நினைக்கிறது.

என் ஒற்றை இதயத்தால்
நான் உணர்ந்து கொண்டிருக்கிறேன்.

பல்லாயிரம் இதயங்களை
ஒரு பூவின் வாசமென
ஒரு மழையின் ஈரமென
ஒரு காற்றின் தொடுகையென
ஒரு பனித்துளியின் சில்லிடலென
ஒரு வெயிலின் தகிப்பென
எல்லாம் முடிந்தும்
நீங்கள் உணராதிருக்கக் கூடும்.

இந்த ஒற்றை இதயத்தை
அதற்காக அன்பிப்பதைத் தவிர
நான் என்ன செய்ய முடியும்?

□

## முத்தங்களை மொழிபெயர்க்கும் மௌனங்கள்

என்னருகே என்னுள் புதைந்து
நீ இருக்கிறாய்.

கூர்மையான கண்ணீர்
என்னைக் காயப்படுத்துமெனில்
நீ என்மீது பொழிகிறாய்
உன் அன்பை.

என்னை ஊடுருவும்
உன் இதய வேதனைகளால்
நான் துயரில் வழிகிறேன்.

காரணமற்ற மனப்பிறழ்வு
ஒருபோதும் தெரியாது எனக்கு.

நீடிக்கத் தெரியாத
என் கோபங்கள்
உன்னிடம் மண்டியிடுகின்றன.

அவற்றை ஏந்தித் திளைப்பதில்
உன்னிடம் வன்மமில்லை என்பதிலே
அன்பின் கிண்ணம் வழிகிறது.

வார்த்தைகளற்ற மௌனங்களை
பரிசளிக்கும்போதெல்லாம் முத்தங்களென
மொழி பெயர்க்கிறேன் நான்.

வாழ்க்கைக்கு இரையாக்க
இதைவிட வேறென்ன வேண்டும்?

பொறுமையும் நம்பிக்கையும்
உன் விழிகளுக்குள் புதைந்து கிடக்கின்றன.

கிளறி எடுப்பதாய் என்னை
உன்னுள் பிணைத்துக் கொள்வதில்
என்ன சங்கடம் இருக்கப் போகிறது?

□

## துயர நிழலில் இளைப்பாறும் மகிழ்ச்சி

சிரிப்பு ஊறும் மனக்கிணறுகளை
தூர்ந்துகொள்ள
முகமூடிகளைக் கழற்றி விடுங்கள்.

கண்ணீரின் உப்புச் சுரப்பை
துயரங்களின் கற்களை
கொஞ்சம் அகழ்ந்து விடுங்கள்.

அங்கே புன்னகையை
ஊற்றெடுக்க வைக்க முடியும்
ஓர் ஆன்மாவை வருடும்
ஆனந்த முனைகளை
வேர்கொள்ளச் செய்யும் பரப்பொன்றை
யாரும் கடப்பாரையைக் கொண்டேனும்
தகர்க்க முடியும்.

எங்கே மகிழ்ச்சி முளைக்கிறதோ
அங்கேதான் துயரமும் நிழல்கொள்கிறது.

துன்ப இதயத்தையும்
இன்ப இதயத்தையும்
இரண்டாகவா வளர்த்திருக்கிறோம்?
ஒன்றுதான் என்பதை
ஒரு சந்தோஷத்திற்காக
வருந்திக்கொண்டிருக்கும் கணம்
உணர்ந்து விடக்கூடும்!

□

**மெல்ல மெல்ல அசைகிறேன்**
**வாசமுள்ள பூக்களின் இதழ்களுக்கு**

செம்மஞ்சள் கீற்றுகளின்
மெல்லிய கதகதப்பில்
ஒரு குளிர்ச்சி
தளைந்து கொண்டிருக்கிறது.

வானத்தின் ஈனக்குரலில்
மேகம் கரைந்து கொண்டிருக்க
பல்லாயிரம் விண்மீன்களைப் பிரசவித்து
நிலாப்பெண் வரைந்து கொண்டிருக்கிறாள்.

ஓர் அற்புதமான பாடலின்
தூரத்து இசையென
குயில் குஞ்சுகளுக்கு
கதை சொல்லிக்கொண்டிருக்கிறது.

துயரக் கடலில்
அடைபட்டுக் கிடக்கும்
துயில் கொள்ளாத இரவில்
காயங்களின் ரணங்களில்
இறுகிய கடல் துடித்தலைகிறது.

யாரும் எதிர்பாராத
யாருமே இல்லாத ஒரு கரையில்
மௌனம் கலைந்த பனித்துளி போல
பெருவனத்தின் இரைச்சல்களைக் கடந்து
மெல்ல மெல்ல அசைகிறேன்
வாசமுள்ள பூக்களின் இதழ்களுக்கு!

□

## வாழ்வை எழுதும் சிறகு

ஒரு பனி நிலத்தில்
வேர் கொண்டு
முளைவிடும் கணத்தில்
பல்லாயிரம் மெழுகுவர்த்தியை ஏற்றி
அதன் ஒளிர் புன்னகையை
உள்ளத்தில் சேர்த்துக் கொள்கிறேன்.

நீண்டதொரு
நிசப்தத்தின் நர்த்தனத்தில்
சுழலும் விழிகளுக்குள்
நச்சுப்புகை ஒன்றை
சுவாசித்துக் கிடக்கிறேன்.

ஒரு பைத்தியத்தின் உயிர்த்தலை
ஊனமாகாமல்
உற்சாகக் குழந்தைகளாய்
பிசைந்து பிசைந்து பிரசவிக்கிறேன்.

இருப்பில்
இல்லாமல் போய்விட்டாலும்
துணைக்கு அழைத்துச் செல்லும்
உன் நிழல்களைத் தூக்கிச் செல்கிறேன்!

கண் செலுத்தி
மெல்லுணர்வால் உளம் தோய்த்து
சிமிட்டித் துள்ளும் ஒரு நட்சத்திரம் போல
காதலைக் கூட்டிச் செல்கிறேன்.

ஓர் ஆதிப்பாறையின்
பருவ வளர்ச்சியில்
என்னுயிர் ஆலிங்கனம் செய்த தருணங்களை
பிரமிப்புகளோடு
வெல்லத் துடிக்கிறேன்.

ஒரு பௌர்ணமி இருளைத்
தொலைத்த வருத்தம் தொல்லை செய்து
கொன்று விடுங்களேன் என்று நிற்பதை
தூக்கி எறிகிறேன்.

ஒரு பௌர்ணமி மரத்தின்
அடியில் இருந்து உரசி எழும்பி
தீர்க்க முடியாத தியானமொழியை
வாசித்து முடிக்கிறது எனைப் பார்த்து
இந்த உதிர் இறகொன்று ஏதோ ஒன்றை!
□

## உயிரை நீட்டுகிறேன்

நீ தரும் அழகான பூக்கள்
வாசமின்றி நிறைகிறது
நீட்டிய நம்பிக்கைப்பானம்
இனித்துக் கசக்கிறது.

நான் சூட்டும் கேடயங்கள்
உன்னுள் மின்னித் தகிக்கின்றன
தூக்கும் சுமைகள் வலிப்பதாய்
உன் இதயம் பொய் கனிகிறது.

வழிகாட்டி என்கிறாய்
ஆரம்பமே முடிவதாயில்லை
முடிவெங்கே தெரிகிறது.

நான் ஆள வேண்டுமென்று துடிக்கிறாய்
நீயே ஆண்டு முடிக்கிறாய்
ஆசைகளை வேரறுப்போம் என்கிறாய்
ஆசையாசையாய் வெல்கிறாய்.

யார் நீ?
நண்பனான எதிரியா?
எதிரியான நண்பனா?
உன்னை உண்மையாய்க் காட்டு
நான் உயிரையே நீட்டுகிறேன்!

□

## சோகம் நிறைந்த வானம்

மரத்தின் கிளைகளில்
பறந்து தாவும்
ஒரு சிட்டுக்குருவியின் நெஞ்சம் போல
எத்தனைக் கர்வமற்றச் சிலிர்ப்பு.

இந்த வைகறை வெயிலும்
விரிந்த மரங்களும்
தனக்கே உரிமையென
சொந்தம் கொண்டாடும்
அதைப் போல
எத்தனை உயிர்ப்பான தேடல்?

இந்தச் சிட்டுக்குருவிகள் இல்லாத
வானத்தை
மரங்களை
பூமி மண்ணை
என் முற்றத்தை
யாரேனும் பரிசளிக்க முடியுமா?

அந்தச் சோகத்தை
யோசித்துக்கூடப் பார்க்க முடியவில்லை
இது பிரக்ஞையான
ஒரு கவிதைத் தேடலின்
சோகம் நிறைந்த வானம்
அது அதைவிட பெரியதாகவே இருக்கும்!

□

## நாணற் காடுகள்

இருப்பதும் பறப்பதுமாய் பட்டாம்பூச்சிகள்.
கடல் நனைத்தக் கால்களில்
சோகம் கசிந்த உப்பு.

துயர் விழுங்கும்
குருவிகளின் பாடல்கள்
நகரப் பூங்காவிற்குள்
தெருவில் இறங்கிய
துடித்துக் கிடக்கும் மனசிற்கு
நீட்டும் புன்னகைச்சிறகு வலிமருந்து.

இன்னும்
தனியாகப் பறக்கும்
பறவையைப் பார்த்துத் தவித்துக்கொண்டு
உலர வைத்த உடைகளில்
உயிர்தேடி சுவாசித்துக்கொண்டு
மனிதர்கள்.

நினைவுகளை மோனத் தவமிருத்தி
அடி மண்ணை
நீர் அள்ளிக்கொண்டு போன பின்னரும்
வாழ்ந்துகொண்டுதானே இருக்கின்றன
இந்த மனங்கள் நாணல்களாய்!
□

## வீட்டுக்குக் கூட்டிப்போயேன் அம்மா

அம்மாவிற்கு!
ஆசைகளால் மூழ்கி எழுதுவது
முத்தம் தர வேண்டும் உனக்கு
உன்னை கட்டிப்பிடித்துக்கொண்டு
தூங்க வேண்டும்.

புலமைப் பரிசில் வாங்கி வந்து
என்னை இந்த விடுதி
விழுங்கிக் கொண்டிருக்கிறது.

நீ இல்லாத
உன் உழுத்தம்மாவும்
எள்ளுருண்டையும் எனக்கெதற்கு?

இந்தப் பன்னிரண்டு வயது
படித்துக் கொள்கிறது
ஒரு சிறைநிரப்பும் தண்டனையை.

மாம்பழம் அனுப்பி வைத்தாய்
அப்பாவிடம்
அது என்னைப் பார்த்துப் பார்த்து
அழுது கிடக்கிறது.

எனக்கு மிகவும் பிடிக்கும் என்று
ஆசையம்மாவின்
நெடுந்தீவுப் பனங்கிழங்கும்
மீன் பொரியலும்

அனுப்பி இருந்தாய்
அதுகூட ஏளனமாகச் சிரித்துக்
காய்ந்து கிடக்கிறது.

பட்டணத்தில் படிக்க வைப்பேன்
நீ கெட்டிக்காரி என்று ஆசை காட்டி
நானே கைது செய்யப்பட்டு
சிறையில் கிடக்கிறேன்
முதலாம் பிள்ளையாய் இருந்த
உன் பிள்ளை
மொக்காகிக் கிடக்கிறேன்.

அணைப்பில் கிடக்க வேண்டுமென்று
துடிக்கிறது உன் குழந்தை
நீ எப்படித் தனியாகத் துரத்தினாய்
இந்த மரக்கட்டிலில் இருந்து
எத்தனை முறை விழுந்து விட்டேன்?

உன்னைப் போலவே இருக்கும்
சற்குணம் மிஸ் என்னை அணைத்து
அழவேண்டாம்
நான் அம்மா மாதிரி என்கிறா
குணராஜா மிஸ்
ஆச்சி பயணம் போகிறாள் கதையை
வாசி என்று தந்தா
அதிபர் ராமநாதன் மிஸ்
எப்போதும் செல்லக் குழந்தையாக
அணைத்துத்தான் வைத்திருக்கிறா
மேற்றன் ஜெகதீஷ் அக்கா
சாப்பாட்டு நேரம் மட்டுமே
என்னைக் கண்டித்து பேசுறா

எல்லாம் நன்றாகவே இருக்கிறது
நீ அருகே இல்லாத
இந்த நன்றொன்றும்
எப்படி நன்றாக இருக்கும்?

திண்ணவேலி குண்டுவெடிப்பு
குண்டு விழுந்த எங்கள் பள்ளிக்கூட
பின்பக்க வகுப்பறை
விடுதி மதில்மேல் ஏறி
ரயிலில் பாய்ந்து செத்துப்போன
மேனகா அக்கா
இன்னும் ஏதேதோ எல்லாம்
ஏதோ ஒரு பயத்தை ஊட்டுகிறது.

உனக்கு உன் பிள்ளை வேண்டுமா
அல்லது ஒரு பைத்தியம் வேண்டுமா?

விடுதி வேண்டாம்
என்னை வீட்டுக்குக் கூட்டிப் போ
பட்டணம் வேண்டாம்
என் ஊருக்குக் கூட்டிப் போ.

மல்லாவி வயலில் குருவி கலைத்து
எங்கள் தோட்டத்து வாய்க்காலில் குளித்து
உன் அரிசிமாப்புட்டுத் தின்ன வேண்டும்.

முற்றத்து மாமரத்தில்
அப்பா கட்டித் தந்த
ஊஞ்சல் ஆட வேண்டும் அம்மா.
நீ நினைத்தபடி டாக்டராக வேண்டும்
இங்கே வந்து பார்
நான் நோயாளியாய்க் கிடக்கிறேன்!

*(1984 இல் எழுதிய முதல் கவிதை)*

□

## லக்சுமி

கால் நூற்றாண்டு கடந்து போயிற்று
யாருக்கும் லக்சுமி ஞாபகம் மறந்து போயிற்றா?
முற்றத்து மாமர நிழலை தனதாக்கி
உறங்கி ஓய்வெடுத்து அதன் நிழலில்
என் வீட்டு நாய்க்குட்டியுடன் தாயுறங்கி
மாங்குளம் ஊடாக முறிகண்டி
கிளி பரந்தன் கொம்படி ஊரியான்
கிளாலி வரை சென்றும்
லக்சுமி துருப்பிடிக்காப் பத்தினி.
இரவுகள் இளவட்ட வரிக் குட்டிகள்
இதமான நிலவுகள் யானைகள்
ஊறிய உறவுகள்
ஊதிப் பெருத்த காதல்கள்
இவற்றோடு உப்புக் காற்றும்
உறவாகும் இந்தப் பத்தினிக்கு.
வான் தாக்க
சகடைகள் பெரல் உருட்ட
விசாலித்த கறுத்தக் கொழும்பான்
கேடயம் ஆனது அச் சுந்தரிக்கு.
மாங்குளம் கரைத்தெடுக்க
போர்க்கண்ணன் போர்த் தொடுக்க
மல்லாவிக்கரை தொடங்கி
உயிலங்குளம் வரை ஓரிரவில்
தேராகி வீடாகி திண்ணையாகி
மாறிப் போனது
அந்தத் தெருச் சொந்தத்திற்கு.
கால் நூற்றாண்டு கடந்தும்
இன்னும் பத்திரமாய்
திடகாத்திரமாய் மாந்திடலில்
தூங்கிக் கொள்கிறது துக்கத்திலும்
நீண்ட சொர்க்கத்தில்!

□

## பெய்யெனப் பெய்யும் பெருமழை

பார்த்ததே இல்லை இன்று வரை
பலயுகம் கடந்த பாதையில்
முட்கள் கற்கள்
புற்கள் பூக்கள் என
அவனை நண்பனாக்க
அகம் மட்டும் போதும்
முதலில் நம்ப முடியவில்லை
பெயரளவில் முகம் தெரியவில்லை
ஒருபோதும்
அவை காலத்தால் உண்மையாக்கப்படும்
நிர்ப்பந்தமாக இல்லாதவரை
உருவகித்துக் கொண்டதே
கண்டம் கடந்தும்
நேரில் கண்டவிதமாய்
நெஞ்சங்கள் உரசும்
ஒரு சோக பிரளயத்திற்காய்
பரஸ்பரம் அடிக்கடி
குரல்கள் கூப்பிட
கற்பனை முகம்
பேச்சுக்கு முன் பிரதிபலிக்கும்
அவரவர் முகங்கள் அடிக்கடி தழுவும்
தழுதழுக்கும்
உலக மூலைகளில்
அன்பால் அமானுஷ்யமாய்ச் சுழல்கிறது
பெய்துகொண்டேயிருக்கும்
பெரு மழையாக
என் முகமே
எனக்கு அடையாளம் தேடி!

□

## சபிக்கப்பட்டச் சிறகுகள்

வானத்தை அளக்கும்
வண்ணத்துப்பூச்சி போல
வாழ்வு சுலபமாயில்லை.

ஓர் இசை கற்பிக்கும்
குயிலினம் போல
இனிமை காண்பதாயில்லை.

பாலையும் நீரையும்
பிரித்துணர் அன்னம் போல
சாமர்த்தியம் தோன்றியதில்லை.

அன்பைப் பிழிகின்ற
அன்றில் போல
பாசம் நீடிக்கவில்லை.

துன்பம் நீடிக்க வானம் அளந்து
துயர் பழகவில்லை.

பறந்து பறந்து கூடு திரும்பும்
லாவகம் தெரியவில்லை.

கூட்டுக்குள் அடைபட்டு
மொழி படிக்கவும் முடியவில்லை.

இருப்பதும்
இதே சாளரத்தை வெறிப்பதும்
ஏன் இப்படி
ஒடிக்கப்பட்ட இறகுகளை உயிர்ப்பிக்க
சாபமிடப்பட்டுள்ளதா
இந்த வாழ்வின் கடைசித் துளியில்?

□

## வனாந்தரத்தின் பெருவெளி

யாருமற்ற
வனாந்தரத்தின் பெருவெளி
யார் இருக்கிறார்கள்
நீ இருக்கிறாயா
நான் இருக்கிறேனா
அவர்கள் இருக்கிறார்களா
இங்கே என்ன நடக்கிறது
இது ஏன் நடக்கிறது
இது எப்படி நடக்கிறது
நீ இருக்கலாம்
நான் இருக்கலாம்
அவர்களும் இருக்கலாம்
அது நேற்றாயிருக்கலாம்
அது இன்றாயிருக்கலாம்
அது நாளையுமாய் இருக்கலாம்
இதுவும் இல்லை
அதுவும் இல்லை
எதுவும் இல்லை
ஒன்றுமே இல்லை
நீ இருக்க
நான் இருக்க
அவர்களும் இருக்க
என்ன இருக்கிறது
உன்னையன்றி யார் இருக்கிறார்கள்
என்னையன்றி யார் இருக்கிறார்கள்
அவர்களையன்றி யார் இருக்கிறார்கள்
இது வனாந்தரப் பெருவெளி
வெறும் வனாந்தரத்தின் பெருவெளி!

□

## பேரலைகள் ஒடித்தத் துடுப்புகள்

அசுரத்தனமான
தோல்விகள் புதையப் புதைய
வேர்கொள்ளும் வெற்றிகள்
முளைகொள்கின்றன.
காற்றைச் சுத்தம் செய்யும்
மரங்களைப் போல
மூச்சுக் கொடுக்கும் உயிரோட்டலாய்
மனங்கள் மாறினால் என்ன?
பேரலைகளால் ஒடிந்த துடுப்புகளுக்கும்
பிறழ்வுகளால் ஓட்டையாகிய படகுகளுக்கும்
அன்புகூர் விழியால்
நங்கூரம் பாய்ச்சி எதிர்நீச்சல் போட
நம்பிக்கைக்கரத்தைத் தூக்கி நீட்டுவோம்.
இந்தப் பூந்தோட்டங்கள்
ஏன் முட்களால் சிதைகின்றன?
மூங்கில்களாய் முளைத்தப் புல்லாங்குழல்களை
முறித்து விடலாமா?
மொட்டுகள் முகையவிழ்த்தாவிடில்
பூக்கள் முகம் காட்டுமா?
நாமே நமக்கு
பிணக்குழி தோண்டுவதா?
ஆறாவது அறிவை
ஒடித்துப் போடலாமா?
சுற்றிக் கிடக்கும் மனச்சிலந்திக்கு
ஏன் முக்காடிடுகிறோம்?

□

## தழுவித் தழுவி அன்பிப்போம்

எங்கும் இல்லை
என்னுள்ளேயே தொலைகிறேன்.
நானே எனக்கு
வேண்டாதவனாய் தெரிகிறேன்.
நீங்கள் என்னை
மிதித்துச் செல்லுங்கள்.
அந்த நானும் நீங்களும்
மௌனத்தைச் சுவாசிப்பதேன்?
கிழிந்து தொங்கும் கூடாய்
மனமே நீ ஊழல் செய்வாயா?
ஒரு பிரச்சனைக்கு பரபரப்பாவதேன்?
அன்பைக் கூர்மையாக்கி
ஆழ் மனதின் அடிவாரத்தில் நுழைந்து
ஔிர்ந்து கிடக்கலாம்.
கொடிய நாவுகளை
மழுக்கி விடுங்களேன்
கொஞ்சம் புன்னகை தடவி
உதடுகளை நீட்டிக் கொள்வோம்.
புத்துணர்ச்சியை
ஒரு வலிமையை வீசி
தழுவித் தழுவி அன்பிப்போமா?
துரோகம் நம்மைத் தூக்கிலிடுமுன்.

*(கணையாழி இலக்கிய இதழ்)*

□

## தூரத்தில் வீசிய மன்னிப்பு

ஒரு வேளை வெகுதூரத்திற்கு அப்பால்
ஒரு திருட்டுக் குருடனாய் இருந்து விடலாம்.

ஓர் அழையாத விருந்தாளியாக
துரோக வாசலைத் திறந்து வைக்கலாம்
சற்றும் எதிர்பாராத விதத்தில்
துளைக்கும் நெருஞ்சிமுள் போல
குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விடலாம்.

அப்போது மிக மிக அருகில்
அன்னியோன்யத்தை உடைய நண்பனாக
ஓர் அன்னியனாய் ஓய்வெடுக்கலாம்.

என் உள்வீட்டு நாற்காலியில்தான்
உட்கார்ந்திருக்கிறேன் என்றும் இறுமாந்திருக்கலாம்.

ஒரே ஒரு புன்னகையைத் தந்து
வாசல்வரை வந்து உன்னை வழியனுப்பவும் கூடும்.

அதைவிட மனக்கடினம் என்னவெனில்
தூரத்தில் வீசிய ஒரு மன்னிப்பை
தூசியென துடைத்தெறிவதுதான்.

இதைவிட ஒரு காரணமும் இல்லாமல்
அது விடைபெறவும் கூடும்
வெறும் பல்வரிசையில்
நிறங்களின் வெண்மை மட்டுமே
ஒளிந்து கிடக்கிறது என்பதையும்
உணர்ந்துகொள்ளவும் கூடும்.

அப்போதாவது துரோகங்களின் நிழல்கள்
ஒருபோதும்
திரையிட்டு மறைத்து வைக்கப்படுவதில்லை
மன்னிக்கப்படுவதில்லை என்பதையும்
புரிந்துகொள்ளவும் கூடும்.

அதுவரையில் நண்பனாகவே
இருந்து விடுகிறேன் நானும்!

□

## இன்றேனும் இன்றேனும்

ஓர் அரைக் கணத்தினை
ஓர் எழும் மூச்சுக் காற்றை
ஓர் அன்பின் பெருநிழலை
ஓர் ஆசையின் கரைத்துளியை
ஓர் இன்பத் தேடலின் உடை குமிழியை
ஓர் உயிர்ப்பின் பிரபஞ்ச நிரந்தரத்தை
ஓர் அன்னையின் கலப்படமற்ற அணைப்பை
ஓர் ஆழியின் மன அடித்தளத்தை
ஓர் ஊசல்குண்டின் கோபச் சலனத்தை
ஓர் உறக்கத்தின் சில நொடிகளை
ஓர் ஒளியின் பிரவாக மிச்சத்தை
ஓர் ஓவியத்தின் நீண்ட மௌனத்தை
ஓர் ஐந்தறிவு ஜீவனின் சுயநலமற்ற அன்பை
ஒரு நிமிடம்
ஊற வைக்க
உணர வேண்டும்
இன்றேனும் இன்றேனும்.

□

## கல்லறைகள் பேசும் மொழி

கல்லறைகள் பேசும்
அந்த ஆழ் மொழியை
கேட்டுக்கொண்டே இருக்கிறேன்.

இறங்கியும் ஏறியும்
ஏதேதோ சொல்லத் துடித்த
அந்த அணிலின் வாழ்விடம்
உனக்கு நிழலாய் நிற்கும்
பென்னம்பெரிய மரக்கிளைதான்.

அம்மா
நீ தூங்கும் இந்த வாழ்விடத்தின்
அந்த மரக்கிளையாக
உனக்கே உனக்காக நிழல் தர
எப்போது அவதாரம் எடுப்பேன்.
எல்லாவற்றையும்
துளித்துளியாய்ப் பருகிய உனக்காய்.

ஒவ்வொரு முழு பௌர்ணமியும்
ஓய்ந்து தேய்ந்துதான் போகிறது
மீண்டும் மீண்டும் கருக்கொள்ள.

ஒரு அமாவாசையாகவே
நீ மட்டும் துயிலில் இருக்கலாமா?

இந்த வானம்
இருண்டே கிடக்கிறது
ஒரே ஒரு முறை
வந்து போக மாட்டாயா?

□

## மெல்லிய ஞாபகங்கள்

ஒளிர்ந்துகொண்டே இருக்கும் நிலவுக்கும்
நிழல் இருக்கத்தானே செய்கிறது.

ஆரத்தழுவும் கைகளின்
ஸ்பரிஸத்தின் உச்சத்தில்தான்
இன்னும் விழிக்கிறது
சூரியன்.

தெருவெங்கும் இறைந்து கிடக்கின்ற
இலைகளின் கன்னத்தில் முத்தமிட
நிழல் பரப்பிக் காத்திருக்கிறது.

கிளைகள் பொழிந்துவிட்டுப் போகின்றன
ஈர மேகங்களாய்
இன்னும் மிச்சம் இருக்கும்
சிலரது ஞாபகங்கள்
துளிர்த்துக்கொண்டே இருக்கிறது
மனவெளி எங்கும்.

*(பரணி – இலக்கியக் காலாண்டிதழ் 2016)*

□

## உயிரின் ஓசையில் உடையும் மௌனம்

ஏதோ ஓர் இறுக்கம்
தொண்டைக் குழியை
தொல்லை செய்துகொண்டிருக்கிறது.
பச்சைகளைக் குடித்த
இளங்காற்றின் கதிர்
அப்பொழுதுதான் தூங்கி எழுந்த
குழந்தை போல
அங்கும் இங்கும் விழிகளைப் புரட்டியபடி.

காற்றில் ஆடும் மரங்களின்
ஆடாத நிழலில் அமர்ந்திருக்கிறேன்
அதன் குழந்தைத்தனத்தை
ஒத்திருந்தது என் காதல்.

வானில் பறந்த பறவையின் நிழல்
என்னருகே மிகமிக ஒட்டிக்கொண்டே
உட்கார்ந்து விடுகிறது
அது எந்நேரத்திலும் ஒரு நம்பிக்கைச்சிறகை
நெஞ்சில் புதைத்துவிட்டு.

நானும் அதனையே
நிழலெனப் பின் தொடர்கிறேன்.
உனக்காக இடம் பிடித்து வைத்திருந்த
அந்தப் பூங்காவின் இருக்கையில்
அதே உன்னிரு கண்ணிமைகளின்

படபடப்புடன் ஒரு பட்டாம்பூச்சி
செட்டைகளை அடித்தபடி
இன்னும் மேலேறி வந்து
மடியில் அமர்ந்து விடுகிறது.

அந்த மழைத்துளியை ஏந்தியபடி
இந்தச் சிப்பி நகர முடியாமல் காத்திருக்கிறது.

ஆனாலும் தேரோட்டம் நடக்கும்
நெஞ்சக் கிடக்கைகளை
ஒரு மௌனத்தை விதைத்தாவது
வந்து தரிசித்துப் போவேன்.

நீ நெஞ்சில் வந்து அமர்ந்து கொண்டல்லவா
அடம் பிடித்து நிற்கிறாய்.

ஒரு காதல் கதையை வாசித்துப் பாரென்று
எழுதி நீட்டிவிட்டு!

□

## உப்புக் கரிக்கும் நதி

நீ வந்துதான் போனாய்
எங்கோ சிந்திய
துகள்களை ஏந்திக்கொண்டு
வெண்மண்
திட்டுகள் பேசிக் கிடக்கின்றன
உன் பாதச் சுவடுகளை
பின்தொடரும் நண்டுகளின் ஓவியங்களை
அழித்து விடக்கூடாதென.

என் உயிர் பிரிந்தழியும்
பெருமூச்சுகளைச் சேமித்து வைத்து
பேரிரைச்சலோடு
மூசுறாய் என்பதற்காக
மூச்சுத் திணறலாமா?

என் கண்களைப் பிழிந்து
கொண்டுபோன
உன் நதியின் குறுக்கே
உப்புக் கலந்துவிட்டது என்பது
இப்போதாவது உன்னை
உறுத்துகிறதா?

போ
அள்ளிச் செல்
என்னோடு
உன் எண்ணங்களையும்!

□

## இரவுகள் முழுவதும் இசையைத் தின்றேன்

பூட்டி வைக்கிறேன்
தொலைந்து போய்விட்டது
இந்தப் பூங்காற்று.

கட்டிப் போடுகிறேன்
கலைந்து காணாமல் போனது
இந்தக் கடலலை.

கேட்டுக்கொண்டே இருக்கிறது
நீ வந்துபோன காலடிச் சப்தம்
நிசப்தத்தில்.
கோர்த்துக் கட்டினேன்
கண்ணீர்த் துளிகளை
உலகப் பெரும் பொய்களெல்லாம்
புதைத்துப் புதையல் ஆனது.

மௌனங்களைத் தொந்தரவு செய்தேன்
ஆழத்தில் சிதைந்து புன்னகை பூத்தது.

நடந்து போனேன்
சுவடுகளே ஆழப் பதிந்து
காணாமல் சுவடின்றி அழிந்தது.

மனதைப் புரட்டிப் பார்த்தேன்
இதயச் சுவர்களில் வெடிப்புத் தெரிந்தது.

ஈரத்தால் நனைந்தேன்
காதல் பாத்திரம் உடைந்து
இரத்தம் வழிந்தது.

இரவுகள் முழுவதும் இசையைத் தின்றேன்
மூச்சுத் திணறி மௌனம் நனைந்தது.

உறக்கத்திற்கு மின்னஞ்சல் செய்தேன்
முகவரி பிழைத்து மீளத் துயின்றது.

புரண்டு புரண்டு மறுபக்கம் படுத்தேன்
மூச்சு முடக்கி கவிதைகள் பிறந்தது!

□

## உயிர்ப்பின் வலிமை

ஓர் உயிர்ப்பின்
நிரந்தரப் பிரிதலில்
கழன்று விழும் இறகு
காற்றுக்கு
உயிர் கொடுத்து
எழுதிவிட்டுப் போகிறது
அதன்
உயிர்ப்பின் வலிமையை.

ஒரே ஒரு நாளில்
வாழ்ந்து சாகும்
இந்தப் பூக்களின்
நம்பிக்கை அதீதம்
உணர்வையே விழுங்கி விடும்
ஒரு கணத்தில்
சாமிக்கும் மாலையாகி
சவமோடும் நிழலாகி
அதன் வாசனையைத்
துடைத்து விடமுடியாமல்!

□

## விண்மீன்கள் பூத்த வகுப்பறை

அந்தப் பௌர்ணமி நிலாக்காலம்
ஒரு சாரல்மழை பெய்து
ஈர்த்திழுக்கும் ஈரத்தால் நனைந்தது.

விண்மீன்களாய் பூத்துக் கிடந்த
நீலவொளிக் குடை
வெறும் வானமாய்
திடீரென வெறித்துப் பார்த்தது.

ஆயிரமாயிரம் ஆனந்தக் குழந்தைகளின்
கன்னக்குழிச் சிரிப்பில் அடங்கிய
என் மூச்சுக்காற்று
திசையெட்டும் பரவி
தேசமெங்கும் தென்றல் வீசுகிறது.

ஒரு சேலை முந்தானையில்
பிடித்துத் தவழ்ந்து
முகர்ந்து மகிழ்ந்த
பள்ளிக் குழந்தைகள்
பார் புகழும் பூங்கொத்துகளாக
விரிந்து கமழ்கின்றன.

அது ஒரு
அழகிய நிலாக்காலம்
என்னதான் இருந்தாலும்
மீண்டும் ஒரு முறை
பள்ளிக்கு இழுத்துச் செல்கிறது
ஓடிக் கொல்லும் மனக் கால்கள்!

☐

## ஆதலினால் காதல் செய்வீர்

சுட்டெரிக்கும் சூரியன் சூடு தகிக்கவா
தண்ணீர் வயலில் இறங்கி
தலை கோதிய நெற்பயிரைக்
காதல் செய்தது?

சூறைக்காற்று
நறுமணப் பூக்களின் இதயம் கண்டா
மூர்க்கம் கலைந்து தென்றல் ஆனது?

நிர்வாண வானத்தை
உடுத்திப் போர்க்கவா
நீலக்கடலை மேகம் தூக்கிச் செல்வது?

பகலெல்லாம் களைத்துப் போன பூமிக்கு
கால் பிடித்து விடவா
யாரும் இல்லாத இரவில்
நிலவு ஓடி வருகுது?

இப்போதும்
வேண்டாம் என்று சொன்னால்
வருத்தப்படுமோ என்பதாலா
ஆழக்கடல் மூச்சிரைத்து
கரையைத் தழுவ ஓடி வருகிறது?

எப்போதும்
இந்தப் பிரபஞ்ச உன்னதம்
காதலைக் காதல் செய்வதால்தானோ
உயிர்த்துக் கிடக்கிறது
உயிர்ப்பில் தன்னையே மிஞ்சி!

□

## பின்னோக்கிப் பாயும் நதியில் உருளும் கூழாங்கற்கள்

கனவுகளைச் சுமந்தபடி
அலை அலையாகப் படர்ந்த
மேகக் குவியல்களை விலக்கிக்கொண்டு
மெதுமெதுவாக வானத்தை அளக்கிறது
உப்பிய நிறைமாதக் கர்ப்பிணி வயிறு போல
மின்னிய பொன் தகட்டு நிலா.

கருணை ஒளியின் வேகத்தின் நடுவே
சுடர் சூழ்ந்தது போல
மந்தமாகப் பெய்துகொண்டிருக்கிறது
குளிர்த்தும் ஒரு தென்றல் மழை.

அந்தக் கோதுமை வயல்களின்
பசுமை மணத்தை
நிலா போர்த்திக்கொண்டு போக
காற்றின் கைகளை
வலிமையுடன் தகர்த்தி
கனவுகளைக் காய்த்து நிற்கிறது
பன்மடங்கு கனிதலுடன்
ஓர் ஆப்பிள் மரமும்
கோதுமை வயல் வரப்புகளில்
இடையிடையே சில கோரைப் புற்களும்.

நகர்ந்து கொண்டிருக்கிறது
உன் ஞாபகங்களின் ஒரு பேருந்தும்
உருளும் கூழாங்கற்களை ஏந்தியபடி
பின்னோக்கிப் பாயும் ஒரு நதியும்!

□

## முத்தங்களின் வேர்கள்

மலைகளின் குவியல்களைக்
கடந்து போய் வருவோம்
பனிப்பொழிவுகளின் குளிர்ச்சியைக் குடித்து
அந்த மேடுகளைத் தாண்டி
தடயங்கள் சேர்த்து வருவோம் வா.

ஒரு மகத்தான உணர்வு நம்மை ஆள
வான்வெளியின் இரவுப் படுக்கைகளை
தரிசித்து வருவோம் வா.

அங்கே தொலைவிலோர் ஆப்பிள் மரம்
அருகருகே பூத்துக் காய்த்துக் குலுங்கி
ஒன்றையொன்று தழுவுவதைப் பார்.

வெண்பாறைகளும்
அதனை உரசியுரசி ஓடும் ஆற்றின்
களிப்பைப் பாடிக்கொண்டே உருளும்
கூழாங்கற்களைப் பார்.

மொட்டுகளை இழுத்துக்கொண்டே
சட்டென்று முகிழ்த்தும்
வண்ண வண்ண இதழ்களைவிட
இயற்கை பிரசவிப்பதை
வேறெதனில் கண்டுவிட முடியும்.

கடல் நுரைகளின் ததும்பலில்
உன் இதயத்தைச் செருகினால்
இடைவிடாது ஒலிக்கும்
மூச்சின் அலைகளைக் கண்டுவிட முடியும்.

பறவைகளின் இராக கீதங்களை உணர்ந்த
இந்தச் செவிகளை
தென்றலிடம் கொடுத்து விடுவோம் வா
மதி மயங்க ஓர் இதமான முத்தத்தோடு
முத்தங்களின் வேர்கள் மிக மிக ஆழமானவை!

□

கவிஞர் தமிழ் உதயாவின்
பிற படைப்புகள்

- அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் கரையொதுங்கும் துறவாடைகள்
- உப்புச்சாடிக்குள் உறையும் துயரக்கடல்
- ஆதிக்கிழவனின் காதல்
- கூடடையும் ஆளண்டாப் பறவைகள்



தமிழ் உதயா

குருதியோட்டத்தில்

துடித்துக் கொண்டிருக்கும்

உணர்வை

ஒவ்வொரு தமிழனும்

தமிழச்சியும் பெறக் கட்டாயம்

இக்கவிதைகளை

படிக்கவேண்டும்.

- ஈரோடு தமிழன்பன்

(முன்னுரையில்)

அட்டை வடிவமைப்பு
தர்மா பிரிண்டர்ஸ்

978-81-930475-3-8

9 788193 047538

நன்செய் பிரசுரம்

விலை: ரூ. 80